# சேவா வாணி

## ஜூன் - 2025



**ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம் (இந்தியா)**

தமிழ்நாடு - தெற்கு

# பிரேம தாரா

(பகவான் பாபா தனது மாணவர்களுக்கு எழுதிய கடிதங்களின் தொகுப்பு)

*(7 ஜனவரி 1976)*

**கோபியரின் பக்தி** *(தொடர்ச்சி ...)*

இதைக் கேட்ட கோபியர் "உங்கள் வேதாந்தம் எங்களுக்கு தேவையில்லை. அதைக் கேட்பதற்கு எங்களுக்கு ஆர்வமும் இல்லை. **நாங்கள் போற்றி புகழ்ந்து நேசித்து வழிபடுகின்ற அந்த அழகிய கிருஷ்ணன் (சாயி) தான் எங்களுக்கு வேண்டும்**; அவன் இல்லாமல் நாங்கள் கட்டுக்கடங்காத துன்பத்தில் இருக்கிறோம். ஆத்மாவைப் பற்றிய அறிவை உங்களிடமே வைத்துக் கொள்ளுங்கள். நாங்கள் போற்றிப் புகழ்கின்ற அவன்தான் எங்களுக்கு வேண்டும்" என்றனர்.

குழந்தைகளே! அப்பொழுது அவர்கள் இதயங்கள் தகித்தன, கண்களில் நீர் ததும்பின, அவர்கள் மௌனமாயினர். இந்த பிருந்தாவனத்தில் கோபியர் இல்லை. அவர்கள் போன்ற உணர்ச்சியும் யாருக்கும் இல்லை.

**உங்கள் சாயி கிருஷ்ணன் எப்போதும் உங்களுடனேயே இருக்கிறார்.** நீங்கள் அதை அறிந்து உணரவில்லை. நான் என்ன செய்வது? என் அன்புக் குழந்தைகளே!



**"ஆனந்தமாக இருங்கள்"**

*- அன்புடனும் அருளாசிகளுடனும்,*

**சாயி கிருஷ்ணன்**

ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம், தமிழ்நாடு தெற்கில் இருந்து **3** பிரிவுகளிலும் மொத்தம் **83** தனித்துவமான செயல்பாடுகள் **ஜூன் 2025** நடந்தன

| ஆன்மிகப் பிரிவு | சேவைப் பிரிவு |
|---|---|
| **31** | **43** |

| கல்விப் பிரிவு |
|---|
| **9** |

# இலவச கண் சிகிச்சை முகாம்

ஈரோடு 29.6.25 **163** பயனாளிகள்

நம் சுவாமியின் ஆசிகளோடு ஒவ்வொரு மாதமும் சித்தோடு சமிதியில் இலவச கண் சிகிச்சை முகாம் நடத்தப்படுகிறது. இந்த மாதம் 29/6/2025 அன்று ஸ்ரீ சத்யசாய் பள்ளியில் நடைபெற்ற இலவச கண் சிகிச்சை முகாமில் 163 வெளி நோயாளிகள் கலந்துகொண்டு பயன் பெற்றனர். அதில் 62 பேர் கண் அறுவை சிகிச்சைக்கு தேர்வு செய்யப்பட்டு கோவை சங்கரா கண் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இந்த வாய்ப்பை அளித்த பகவானுக்கு நமஸ்காரங்கள்.

# இலவச மருத்துவ முகாம்

ஈரோடு 21.6.25 57 பயனாளிகள்

பகவானின் ஆசிகளோடு ஈரோடு மெயின் சமிதியில் ஒவ்வொரு ஞாயிறு அன்றும் இலவச மருத்துவ முகாம் டாக்டர். A.L.ராமநாதன் தலைமையில் நடைபெற்று வருகிறது. இந்த மாதம் 32 நோயாளிகள் பயன் பெற்றனர். கிராமப்புற மருத்துவ சேவையானது 21/6/2025 அன்று தீரன் நகர் சீரடி பாபா கோவிலில் டாக்டர்.உஷா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இம்முகாமினால் 25 பேர் பயனடைந்தனர்.



## நாராயண சேவை

ஈரோடு | 22.6.25 | 145 பயனாளிகள் | 25 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெரும் கருணையினால் ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் சமிதியில் 22/6/2025 அன்று மதியம் நாராயண சேவை கன்வீனர் திரு.வெங்கட சுப்பிரமணியன் சார்பில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதில் 16 ஆண்கள் மற்றும் 9 மஹிளா அன்பர்கள் என மொத்தம் 25 பேர் கலந்து கொண்டு சேவை புரிந்தனர். 145 பேர் இந்த நாராயண சேவை மூலம் பயன் பெற்றனர். இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த நம் சுவாமிக்கு அநேக கோடி நமஸ்காரங்கள்.



# பகவானுக்கு நன்றி சமர்ப்பித்தல்

ஈரோடு 21.6.25

பகவானின் பெரும் கருணையினால் ஈரோடு மாவட்ட மகிளா அன்பர்கள் 21.6.2025 அன்று லட்சுமி கார்டன் சமிதியில் ஒன்று கூடினர். பர்த்தியாத்திரையில் பகவான் முன்னிலையில் பாடுவதற்கான வாய்ப்பு கிடைக்கப்பெற்றதற்கு பகவானுக்கு நன்றி கூறும் வகையில் தங்களின் சமிதிகளில் மகிளாக்களின் சேர்க்கை வலுப்பெறுவதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதில் 35 மகிளா அன்பர்கள் மாவட்டத் தலைவர் சமிதி கன்வினர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் 10 பேர் கலந்து கொண்டனர். ஞாயிற்றுக்கிழமை 22.6.2025 அன்று மூலப்பாளையம் சமிதியில் காலை 8 மணி முதல் 10:00 மணி வரை நடந்த கூட்டத்தில் சாய் யுவதிகள் 50 பேர் கலந்து கொண்டனர். பஜன் பயிற்சி எடுத்துக் கொள்வோம் மாதம் ஒருமுறை சுவாமியின் ஏதேனும் ஒரு சேவை நிகழ்ச்சியில் பங்கு பெறுவோம் என உறுதி எடுத்துக் கொண்டனர்.

காலை 11 மணி முதல் ஒரு மணி வரை சித்தோடு சமிதியில் 25 சாயி இளைஞர்கள் சேர்ந்து 19 ஆவது சாதனா முகாம் ஐந்தாவது பத்தி யாத்திரா நிகழ்வுகளை திறம்பட செய்து பகவானின் ஆசிகளை பெற்றதில் மிகுந்த மகிழ்ச்சியை அடைந்தனர். மேலும் அடுத்து வரும் நிகழ்வுகளிலும் தாங்கள் சேவை புரிய வேண்டுமென்று பிரார்த்தனை செய்து கொண்டனர். மேலும் பல இளைஞர்களையும் சுவாமியின் வழியில் அழைத்து வந்து அவர்கள்

பெற்ற ஆனந்தத்தை அடைய செய்வதாக கூறினார்கள்.

அன்று மாலை 3:30 மணி முதல் 5:30 மணி வரை ஸ்ரீ சத்ய சாயி பாலவிகாஸ் முன்னாள் மாணாக்கரின் கூட்டம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து ஐந்தாவது பர்தி யாத்திரையில் அரங்கேறிய கலை நிகழ்ச்சியை பொறுப்பேற்று நடத்திய சாயி சகோதர சகோதரிகளை பாராட்டி அவர்களுக்கு சுவாமியின் பிரசாதம் வழங்கப்பட்டது. இந்த வாய்ப்பை அளித்த பகவானுக்கு அனந்தகோடி நமஸ்காரங்கள்.

சனிக்கிழமை இரவு ஞாயிற்றுக்கிழமை காலை சிற்றுண்டி மதிய உணவு மற்றும் இரவு உணவு பகவானின் பிரசாதமாக அனைவருக்கும் வழங்கப்பட்டது.

# பிரசாந்தி சேவைப்பணி புரிந்தோரை கௌரவித்தல்

ஈரோடு 16.6.25 12 சேவாதளத்தொண்டர்கள்

நமது பகவானின் ஆசிகளுடன் ஈரோடு தெற்கு பள்ளம் சமிதியில் 16.6.2025 அன்று புட்டபர்த்தியில் சென்று சேவை புரிந்த சாய் அன்பர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

அன்று மாலை சமிதி பஜனையைத்தொடர்ந்து புட்டபர்த்தியில் சேவை புரிந்த இளைஞர்கள் மற்றும் மஹிளா அன்பர்களுக்கு பகவானின் பிரசாதம் வழங்கப்பட்டது. அவர்கள் சேவையை ஊக்குவிக்கும் பொருட்டு நடத்தப்பட்ட இந்த நிகழ்ச்சியில் மாநில சேவை ஒருங்கிணைப்பாளர் திரு.ராஜேந்திரன் மற்றும் ஈரோடு மாவட்டம் மஹிளா சேவை ஒருங்கிணைப்பாளர் திருமதி.லீலாவதி அவர்கள் கலந்துகொண்டு பிரசாந்தி சேவை புரிந்தவர்களுக்கு பிரசாதம் வழங்கினார்கள்.

இதில் 10 மஹிளா அன்பர்கள் மற்றும் 2 ஆண்கள் பர்த்தி சேவையில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு பகவானின் ஆசிகளைப் பெற்றனர்.





# பௌர்ணமி பூஜை

ஈரோடு 11.6.25 **15** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் நல்லாசிகளுடன் ஈரோடு மாவட்டம் சித்தோடு சமிதியில் 11.6.2025 அன்று பௌர்ணமி பூஜை மிகச் சிறப்பாக நடைபெற்றது. அதிகாலை 5 மணி அளவில் ஓம்காரம் சுப்ரபாதம் மற்றும் நகர் சங்கீர்த்தனம் ஆகியவை நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து பௌர்ணமி பூஜையும் ம்ருத்யும் ஜெய ஹோமமும் நடைபெற்றது. இதில் 7 ஆண்கள் மற்றும் 8 மஹிளா அன்பர்கள் கலந்து கொண்டு பகவானின் அருளைப் பெற்றனர்.





# மஹிளா தினம்

ஈரோடு 19.6.25 **16** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெரும் கருணையினால் ஈரோடு மெயின் சமிதி மற்றும் மூலப்பாளையம் சமிதி இனைந்து, 19.6.2025 அன்று மஹிளா தினத்தை முன்னிட்டு ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாம பாராயணம் மற்றும் பஜனை நடத்தின. ஈரோடு மெயின் சமிதியில் 16 மஹிளாக்களும் மூலப்பாளையம் சமிதியில் 10 மஹிளாக்களும் கலந்து கொண்டு பகவானின் ஆசிகளைப் பெற்றனர்.





# மஹிளா பயிற்சி முகாம்

ஈரோடு 29.6.25 200 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் ஆசிகளோடு 29/6/25 ஈரோடு, கோபி சீதா கல்யாண மண்டபத்தில் மஹிளா அன்பர்களுக்கு பயிற்சி முகாம் நடத்தப்பட்டது.

காலை ஓம்காரம் சுப்ரபாதம், நகர் சங்கீர்த்தனம் அதனைத் தொடர்ந்து வேதம், பஜனை நடைபெற்றது. மேலும் அங்கு வந்திருந்த மஹிளாக்களுக்கு பஜனை, பாலவிகாஸ், சேவை ஆகிய மூன்று பிரிவுகளின் முக்கியத்துவத்தை அழகாக எடுத்துக் கூறப்பட்டது. மாவட்ட மகளிர் பஜனை ஒருங்கிணைப்பாளர் செல்வி எஸ். சத்ய பிரியதர்ஷினி அழகாக பஜனை பாடுவது பற்றி விளக்கினார். மேலும் பஜனை பயிற்சியும் கொடுத்தார்.

அவரைத் தொடர்ந்து கதை எப்படி சொல்ல வேண்டும் மற்றும் அதன் மூலம் இன்றைய குழந்தைகளின் நன்னடத்தைக்கு அது எப்படி உதவி புரிகிறது என திருமதி.பார்வதி எடுத்துரைத்தார்.

ஆரோக்கியம் மற்றும் சுகாதாரமான உணவு பழக்க வழக்கங்களைப் பற்றி சத்தியமங்கலத்தைச் சேர்ந்த டாக்டர்.கிருத்திகா மிக அழகாக எடுத்துச் சொன்னார். மஹிளாக்கள் கேட்ட சந்தேகங்கள் அனைத்தையும் அழகாக நிவர்த்தி செய்தார். ஆரோக்கியத்தின் முக்கியத்துவத்தை கூறி எப்படி உணவு பழக்கங்கள் மூலம் அதை பெறலாம் என சொன்னார்கள்.

தேநீர் இடைவேளைக்குப் பிறகு சேவை பிரிவின் நிகழ்வாக “புட்டபர்த்தி சேவையின் மகிமைகள்” பற்றிய ஒரு கலந்துரையாடல் நடைபெற்றது. திருமதி.ஹேமலதா, திருமதி.விசாலாட்சி, திருமதி.கலைவாணி, திருமதி.மேகலா அவர்கள் பேசினார்கள்.

நிகழ்ச்சியின் நிறைவாக மாநில ஆன்மீக ஒருங்கிணைப்பாளர் திரு.கணபதி அவர்கள் இறைவனின் நூறாவது பிறந்தநாளை முன்னிட்டு அனைவரும் ஆற்ற வேண்டிய சேவையைப் பற்றி பேசினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் 200 மஹிளா அன்பர்கள் பங்கு கொண்டனர். பகவானுக்கு மங்கள ஹாரத்தியுடன் அன்றைய நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றன. அனைவருக்கும் மதிய உணவு பகவானின் பிரசாதமாக வழங்கப்பட்டது.



# முதியோர் இல்ல சேவை

ஈரோடு | 1.6.25 | 60 பயனாளிகள் | 7 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெரும் கருணையினால் ஈரோடு மாவட்டத்தின் சமிதிகள் இணைந்து முதியோர் இல்லத்திற்கு சென்று ஒவ்வொரு மாதமும் பல்வேறு சேவைகளை செய்து வருகின்றன. மே மாதத்தில் 1/6/2025 அன்று NL கருணை இல்லம் என்ற முதியோர் காப்பகத்தில் தூய்மை செய்யும் பணியை சிறக்கச்செய்தனர். இந்த சேவையில் 7 சேவாதள அன்பர்கள் கலந்து கொண்டனர். இதன் மூலம் அந்த இல்லத்தில் உள்ள 60 பயனாளிகள் பயன் அடைந்தனர். இந்த வாய்ப்பை அளித்த நம் சுவாமிக்கு அனந்த கோடி நமஸ்காரங்கள்.



# இலவச கண் பரிசோதனை முகாம்

கன்னியாகுமரி 1.6.25 **244** பயனாளிகள்
**22** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களின் தனிப்பெருங்கருணையினால் கன்னியாகுமரி மாவட்டம் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனங்களின் சார்பில் இலவச கண் பரிசோதனை முகாம் திருநெல்வேலி அரவிந்த் கண் மருத்துவமனையுடன் இணைந்து, 01/06/2025 அன்று வடசேரியில் அமைந்துள்ள எஸ்.எம்.ஆர்.வி மேல் நிலைப் பள்ளி வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

முகாமிற்கான முதன்மை ஏற்பாடுகள் 31/05/2025 அன்று மாலை 03.00 மணி முதல் 06.00 மணி வரை மாவட்ட சாய் அன்பர்களால் மேற்கொள்ளப்பட்டது. 01/06/2025 அன்று காலை 8.30 மணிக்கு பஜனையுடன் சேவை நிகழ்ச்சி தொடங்கியது.

244 பயனாளிகள் பரிசோதிக்கப்பட்டனர். இதில் கண் அறுவை சிகிச்சைக்காக 69 பேர் தேர்வுசெய்யப்பட்டனர். அவர்கள் அனைவரும் அன்று மாலையே திருநெல்வேலி அரவிந்த் கண் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டது.

சேவையில் சத்ய சாயி அன்பர்கள் 22 பேர் கலந்து கொண்டனர். மேலும் அனைவருக்கும் நாராயண சேவை வழங்கப்பட்டது.

இறுதியாக மதியம் 2:30 மணியளவில் ஆரத்தியுடன் சேவை நிகழ்ச்சி நிறைவடைந்தது.





# மாதாந்திர மஹிளா தினம்

**கன்னியாகுமரி** 19.6.25 **27** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் தனிப்பெருங்கருணையினால், கன்னியாகுமரி மாவட்ட ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனங்களின் சார்பில்,19/06/2025 அன்று மாதாந்திர மஹிளா தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. குலசேகரன்புதூர் சமிதியில் மஹிளா அன்பர்கள் ஒன்றுகூடி, காலை 10:00 மணிக்கு ஓம்காரம் மற்றும் சாய் காயத்ரி பாராயணம் செய்தனர். பின்பு ஸ்ரீ சத்ய சாயி புரத சத்து மாவிற்குத் தேவையான பொருட்களை மிகுந்த கவனத்துடன் வறுத்துத் தயார் செய்தனர். அதனைத் தொடர்ந்து, உழவாரப் பணியாக குலசேகரன்புதூர் பிள்ளையார் கோவிலின் சுற்றுப்புறமும், சமிதியும் சுத்தம் செய்யப்பட்டன.

நாகர்கோவில் சமிதியில் மஹிளா அன்பர்கள் இணைந்து மாலை 3:30 மணி முதல் 4:30 மணி வரை உழவாரப்பணி செய்தனர். அதனைத் தொடர்ந்து, லலிதா சஹஸ்ரநாம பயிற்சியும் நடைபெற்றது. மேலும், மாலை 5:30 மணி முதல் மகிளா தின சிறப்பு பஜனை மிகச் சிறப்பாக நடைபெற்றது.

வல்லன்குமாரவிளை சமிதியில் மஹிளா அன்பர்களால் மாலை 6:30 மணிக்கு விளக்குப் பூஜை சிறப்பாக நடத்தப்பட்டது. ஓம்காரம் மற்றும் சாய் காயத்ரி பாராயணம் செய்தபின்பு விளக்குப் பூஜை நடைபெற்றது.





# ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ரநாம பாராயணம்

**கன்னியாகுமரி** 21 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் தனிப்பெருங்கருணையினால் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த குலசேகரன்புதூர் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியின் சார்பில் சதாப்தி மகா மிருத்யுஞ்சய சாந்தி 2025 (பகவானின் 100 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு நடத்தப்படும் 100 சிறப்பு நிகழ்ச்சிகள்) திட்டத்தின் ஒரு பாகமாக 12/06/2025,19/06/2025 மற்றும் 26/06/2025 ஆகிய மூன்று வியாழக்கிழமைகளிலும் ஓம்காரம் மற்றும் சுப்ரபாதத்தைத் தொடர்ந்து உலக அமைதி வேண்டி பாலவிகாஸ் குரு ஸாய் சித்ரா மற்றும் ஸாய் அன்பர்கள் ஒன்றாக சேர்ந்து ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ரநாமம் பாராயணத்தில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டனர். இந்நிகழ்ச்சியில் தவறாமல் 2 பாலவிகாஸ் குருமார்கள், 3 மகளிர் மற்றும் 2 ஆண்கள் கலந்து கொண்டனர்.



# ஸ்ரீ சத்ய சாயி பிரேம தரு

**கன்னியாகுமரி** 1.6.25 **5** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் தனிப்பெருங்கருணையினால் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த குலசேகரன்புதூர் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியின் சார்பில் சதாப்தி மகா மிருத்யுஞ்சய சாந்தி 2025 (பகவானின் 100 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு நடத்தப்படும் 100 சிறப்பு நிகழ்ச்சிகள்) திட்டத்தின் ஒரு பாகமாக 01/06/2025 அன்று ஸ்ரீ சத்ய சாயி பிரேம தரு திட்டத்தின் கீழ் 2 மரக்கன்றுகள் நடப்பட்டன. இதில் 5 சேவாதாளத் தொண்டர்கள் கலந்துகொண்டனர்.





# ஸ்ரீ சத்ய சாயி புரத சத்து மாவு வழங்குதல்

கன்னியாகுமரி | 86 பயனாளிகள் | 6 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களின் தனிப்பெருங்கருணையினால், கன்னியாகுமரி ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனங்களின் சார்பில் தேரூர் கஸ்தூரிபாய் நடுநிலைப்பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு ஒவ்வொரு மாதமும் இரு தவணைகளாக ஸ்ரீ சத்ய சாயி புரத சத்து மாவு வழங்குவது வழக்கம். இந்த மாதமும், 06/06/2025 மற்றும் 20/06/2025 ஆகிய இரு தினங்களில், குலசேகரன்புதூர் சமிதி மகிளா அன்பர்களால் கவனத்துடன் தயாரிக்கப்பட்ட புரத மாவு பள்ளி நிர்வாகத்திடம் முறையாக ஒப்படைக்கப்பட்டது. இந்தப் புரத மாவு ஆசிரியர்களால் தினமும் குழந்தைகளுக்கு நண்பகல் உணவாக சமைத்துக் கொடுக்கப்படுகிறது. இத்திட்டத்தின் பயனாளிகளாக 86 பள்ளி குழந்தைகள் உள்ளனர். இந்த சேவை நிகழ்ச்சியில் 06 மகிளா அன்பர்கள் கலந்துகொண்டனர்.



# இலவச கண் சிகிச்சை முகாம்

காஞ்சிபுரம் தெற்கு 29.6.25 **50** பயனாளிகள்

**5** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் ஆசியுடன் செங்கல்பட்டு சேவா சமிதியின் சார்பாக, பம்மல் சங்கரா கண் மருத்துவமனை மூலமாக இலவச கண் சிகிச்சை முகாம் 29/06/2025 அன்று ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதி செங்கல்பட்டில் நடைபெற்றது. இதில் மொத்தம் 32 பேர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். இதில் கண் புரை அறுவை சிகிச்சைக்குத் தேர்ந்து எடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 21 ஆகும். இந்நிகழ்வில் பங்கேற்ற சேவாதளத்தொண்டர்களின் எண்ணிக்கை 5 ஆகும். முகாமில் பங்கேற்ற அனைவருக்கும் நாராயண சேவை வழங்கப்பட்டது. நாராயண சேவையில் மொத்தம் 8 குடும்பங்கள் பங்கேற்று பகவானுக்குத் தொண்டு புரிந்தனர். நாராயண சேவை 50 பேருக்கு வழங்கப்பட்டது.





# இலவச பொது மருத்துவ முகாம்

காஞ்சிபுரம் தெற்கு

120 பயனாளிகள்

22 சேவாதளத்தொண்டர்கள்

நமது பிரியமான பகவானின் பேரன்பு கலந்த நல்லாசிகளுடன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள சமிதிகள் தங்களின் சமிதிகளைச் சுற்றியுள்ளோருக்கு இலவச பொது மருத்துவ முகாம்களை மாதந்தோறும் நடத்தி வருகின்றன. கடந்த ஜூன் மாதத்தில் பூண்டி பஜார் சேவா சமிதி, பார்வதி நகர் சேவா சமிதி, மண்ணிவாக்கம் சேவா சமிதி, ஆகிய சமிதிகள் பொது மருத்துவ முகாம்களை நடத்தி பகவானுக்குத் தொண்டாற்றின.

பூண்டிபஜார் சமிதியின் சார்பாக, 15/06/2025 அன்று இலவச பொது மருத்துவ முகாம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தாம்பரம் மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர் 1, செவிலியர் 3, பெயர்பதிவு நபர் 1 ஆகியோர் பங்கு கொண்டனர். இந்த இலவச முகாமில் இரத்த அழுத்தம் கண்டறிதல், சர்க்கரை அளவு கண்டறிதல், இதயத் துடிப்பு கண்டறிதல், கண் பரிசோதனை ஆகியவை மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் மருத்துவ ஆலோசனை மற்றும் இலவச மருந்துகளும் வழங்கப்பட்டன. இந்த முகாமில் 32 நபர்கள் பரிசோதனை செய்து கொண்டு பயன்பெற்றனர். இந்த மகத்துவமான சாயி சேவையில் சமிதி அங்கத்தினர்கள் 10 பேர் கலந்து கொண்டு பகவானின் ஆசீர்வாதம் பெற்றனர்.

பார்வதி நகர் சேவா சமிதியின் சார்பாக கரசங்கால் கிராமத்தில் பொது மருத்துவ முகாம் 08/06/2025 அன்று நடைபெற்றது. இதில் சாய் அன்பர்கள் மற்றும் மருத்துவர்கள் அன்புடனும் ஆர்வத்துடனும் பங்கேற்று மக்களுக்குத் தொண்டாற்றினர். இம்முகாமில் இரத்த அழுத்தம் கண்டறிதல் மற்றும் நீரிழிவு நோயாளிகளுக்கு சர்க்கரை அளவுகளை கண்டறிதல், அவர்களின் உடல் எடை கண்டறிதல் ஆகிய பரிசோதனைகள் நடத்தப்பட்டு அதற்கு உரிய மருந்து மாத்திரைகள் நோயாளிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. கலந்து கொண்ட அனைத்து நபர்களுக்கும் நாராயண சேவை வழங்கப்பட்டது. 44 கிராம பொது மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று பயன்பெற்றனர். அத்துடன் 30 தாய்மார்களுக்கு சாயி புரத சத்து மாவு பொட்டலங்கள் வழங்கப்பட்டன. இந்த மகத்துவமான சாயி சேவையில் சமிதி அங்கத்தினர்கள் 7 பேர் கலந்து கொண்டு பகவானின் ஆசீர்வாதம் பெற்றனர்.

மண்ணிவாக்கம் சேவா சமிதியின் சார்பாக 001/06/2025, 08/06/2025, 15/06/2025 மற்றும் 22/06/2025 ஆகிய நாட்களில் மண்ணிவாக்கம் சமிதியில் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் தலை சிறந்த மருத்துவரான டாக்டர். சேஷகிரி (நெஞ்சக நோய் நிபுணர் - ஓய்வுபெற்ற அரசு மருத்துவர்), டாக்டர் செல்வி மனிஷா (பொது நல மருத்துவர்), டாக்டர் செல்வி பிரசாந்தி (தோல் நோய் நிபுணர்) ஆகியோர் பங்கேற்று முகாமிற்கு வருகை தந்த 44 நோயாளிகளுக்கு சிறந்த முறையில் சிகிச்சை அளித்தனர். இதில் சுமார் 17 பேருக்கு இரத்த பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது. நோயாளிகளுக்கு மருந்துகளும் இலவசமாக வழங்கப்பட்டன. இந்த சேவையில் சராசரியாக மண்ணிவாக்கம் சேவா சமிதியின் 5 சாயி அன்பர்கள் மிகுந்த ஆர்வத்துடனும், சேவை மனப்பான்மையுடனும் ஒவ்வொரு முகாமிலும் பங்கேற்று பகவானுக்குத் தொண்டாற்றினர்.


Shot on moto g45 5G



# இல்லத்திலும் உள்ளத்திலும் சாயி நாமம்

காஞ்சிபுரம் தெற்கு

362 சேவாதளத்தொண்டர்கள்

நமது இதயத்தில் என்றும் வாசம்செய்யும் நமது பகவானின் அருளுடன். காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட சமிதிகள் ஒவ்வொரு மாதமும் "இல்லத்திலும் உள்ளத்திலும் சாயி நாமம்" என்ற திட்டத்தின் கீழ், தங்கள் சமிதியைச் சார்ந்த அங்கத்தினர்களின் இல்லங்களிலோ, முதியோர் இல்லங்களிலோ, அல்லது மற்றவர்களின் இல்லங்களிலோ வேத பாராயணம், பஜனை ஆகியவற்றை மேற்கொண்டு, சாயி நாமத்தைப் பலரின் உள்ளங்களில் அவனருளாலே நிலைநாட்டி, அவர்களை ஆத்ம திருப்தி அடையச்செய்கின்றன. அந்த வகையில் கடந்த ஜூன் மாதத்தில், பூண்டி பஜார் சேவா சமிதி, பெருங்களத்தூர் சேவா சமிதி, மறைமலை நகர் சேவா சமிதி, ஸ்ரீபெரும்புதூர் சேவா சமிதி, பெரிய காஞ்சிபுரம் சேவா சமிதி ஆகிய சமிதிகள் இந்த சேவையில் கலந்துகொண்டு பகவானுக்குத் தொண்டாற்றின.

மறைமலை நகர் சேவா சமிதியின் சார்பாக சுவாமியின் 100வது பிறந்தநாள் விழா கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக 07/06/2025, 14/06/2025, 21/06/2025, மற்றும் 28/05/2025 ஆகிய தினங்களில் பக்தர்களின் இல்லங்களில் சிறப்பு பஜனை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில், சமிதி அங்கத்தினர்கள் மற்றும் பாலவிகாஸ் மாணவச்செல்வங்கள் திரளாக பங்கேற்றனர்.

பெருங்களத்தூர் சேவா சமிதியின் சார்பாக பக்தர்களின்

இல்லங்களில் ருத்ர பாராயணமும், பஜனையும் நடைபெறுகின்றன. அதன் படி 06/06/2025, 13/06/2025, 19/06/2025, 20/06/2025, 27/06/2025 மற்றும் 28/06/2025 ஆகிய தினங்களில் இந்நிகழ்வு சமிதி அங்கத்தினர்களின் இல்லங்களிலும், 21/06/2025 மற்றும் 28/06/2025 ஆகிய தினங்களில் சமிதியின் SSM நகர் பஜனை மண்டலி அங்கத்தினர்கள் இல்லங்களிலும் நடைபெற்றது. இதில் சமிதி அங்கத்தினர்கள், பஜனை மண்டலி அங்கத்தினர்கள் மற்றும் பாலவிகாஸ் மாணவச்செல்வங்கள் கலந்துகொண்டு பகவானின் அருளைப் பெற்றனர்.

பூண்டி பஜார் சேவா சமிதியின் சார்பாக 06/06/2025 மற்றும் 07/06/2025 ஆகிய தினங்களில் சமிதி அங்கத்தினர்களின் இல்லங்களில் சிறப்பு பஜனை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் சமிதி அங்கத்தினர்கள், சாயி இளைஞர்கள் மற்றும் பாலவிகாஸ் மாணவச்செல்வங்கள் கலந்துகொண்டு பகவானின் அருளைப் பெற்றனர்.

ஸ்ரீபெரும்புதூர் சேவா சமிதியின் சார்பாக 19/06/2025 அன்று ஸ்ரீபெரும்புதூர் அருகிலுள்ள மாம்பாக்கத்தில் அமைந்துள்ள மஹாசக்தி நாராயணி மருத்துவமனையில் சிறப்பு பஜனை நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சமிதி அங்கத்தினர்கள் மற்றும் பாலவிகாஸ் மாணவச்செல்வங்கள் கலந்துகொண்டு பகவானின் அருளைப் பெற்றனர்.

பெரிய காஞ்சிபுரம் சேவா சமிதியின் சார்பாக 29/06/2025 அன்று சமிதியின் பாலவிகாஸ் குழந்தைகள் ஒன்று சேர்ந்து, சிறப்பு பஜனை நிகழ்ச்சியினை பாலவிகாஸ் குருமாரின் வழிகாட்டுதலுடன் நடத்தினர். பாலவிகாஸ் குழந்தைகள் மிகுந்த ஆர்வத்துடன் இதில் கலந்துகொண்டு பகவானின் அருளைப் பெற்றனர்.



## உழவாரப்பணி

**காஞ்சிபுரம் தெற்கு** 66 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையினால் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட சமிதிகள் தங்கள் சமிதியைச் சுற்றியுள்ள ஆலயங்களை சுத்தம் செய்து பொது மக்களுக்கும், பகவானுக்கும் சேவை செய்து வருகின்றன. அந்த வகையில் கடந்த ஜூன் மாதத்தில் பூண்டி பஜார் சேவா சமிதி, கூடுவாஞ்சேரி சேவா சமிதி, பார்வதி நகர் சேவா சமிதி, ஆகிய சமிதிகள் இந்த சேவையில் ஈடுபட்டன.

பூண்டி பஜார் சேவா சமிதியின் சார்பாக 01/06/2025 அன்று சமிதியில் உழவாரப்பணி நடைபெற்றது. இதில் சமிதி அங்கத்தினர்கள், சாயி இளைஞர்கள் மற்றும் பாலவிகாஸ் மாணவச்செல்வங்கள் கலந்துகொண்டு பகவானுக்கு தொண்டாற்றினர்.

கூடுவாஞ்சேரி சேவா சமிதியின் சார்பாக 08/06/2025 அன்று சமிதியில் உழவாரப்பணி நடைபெற்றது. இதில் சமிதியின் பாலவிகாஸ் மாணவச்செல்வங்கள் மற்றும் அவர்களின் பெற்றோர் கலந்துகொண்டு பகவானின் அருளைப் பெற்றனர்.

பார்வதி நகர் சேவா சமிதியின் சார்பாக, ஒவ்வொரு வாரமும் சமிதியில் உழவாரப்பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதில் சமிதி அங்கத்தினர்கள், பாலவிகாஸ் குழந்தைகள், தையல் வகுப்பு மாணவிகள் ஆகியோர் பங்கேற்று உழவாரப் பணியாற்றுவர். இதில்

ஒட்டடை நீக்குதல், பூஜை விளக்கு மற்றும் பாத்திரங்களை சுத்தம் செய்தல், பெருக்குதல் போன்ற பல்வேறு சுத்தப்படுத்தும் பணிகள் அடங்கும்.



# ஏகாதச ருத்ர பாராயணம்

காஞ்சிபுரம் தெற்கு | 28.6.25 | 51 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையினால் பூண்டி பஜார் சேவா சமிதியின் சார்பாக 28/06/2025 அன்று சமிதியில் ஏகாதச ருத்ர பாராயணம் நடைபெற்றது. அத்துடன்சேர்த்து, சிவலிங்கத்திற்கும், ஷீரடி சாயி பாபா விக்கிரகத்திற்கும் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் பூண்டி பஜார் சேவா சமிதி மற்றும் இந்திரா நகர் சேவா சமிதியின் அங்கத்தினர்கள், பாலவிகாஸ் மாணவச்செல்வங்கள் மற்றும் அவர்களின் பெற்றோர் கலந்துகொண்டு பகவானின் அருளைப் பெற்றனர்.





# கோ பூஜை

காஞ்சிபுரம் தெற்கு | 10.6.25 | 60 பயனாளிகள் | 8 சேவாதளத்தொண்டர்கள்

நமது பகவானின் அருளால், மறைமலை நகர் சேவா சமிதியின் சார்பாக 10/06/2025 அன்று, ஆத்தூர் வேத பாடசாலையில் கோ பூஜை நடைபெற்றது. பின்பு அங்குள்ள 60 பசுக்களுக்கு அகத்திக்கீரை வழங்கப்பட்டது. மொத்தம் பங்குகொண்ட சேவதளர்களின் எண்ணிக்கை 8.



# சாயி இலக்கியம் படித்தல்

காஞ்சிபுரம் தெற்கு

900 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் பாபா அருளிய 9 நன்னடத்தை விதிகளுள் ஒன்று சாயி இலக்கியங்களைப் படிப்பது. அதனைக் கடைபிடிக்கும் வண்ணமாக, தாம்பரம் சேவா சமிதியின் சார்பாகக் கடந்த ஜூன் மாதத்தின் அனைத்து நாட்களிலும் இணையதள சந்திப்பின் வாயிலாக வாஹினி கற்றல் தொடர் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இதில் ராமகதா ரச வாஹினி, பாகவத வாஹினி, தர்ம வாஹினி, பிரேம வாஹினி, தியான வாஹினி, பிரசாந்தி வாஹினி, சத்ய சாயி வாஹினி, சந்தேஹ நிவாரணி, வித்யா வாஹினி ஆகியவற்றின் கற்றல் நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக நடந்து முடிவுற்றன. இந்நிகழ்வில் சமிதி அங்கத்தினர்கள், பாலவிகாஸ் குழந்தைகள், பஜனை மண்டலி அங்கத்தினர்கள், பாலவிகாஸ் பெற்றோர் உட்பட சராசரியாக 30 பேர் தினமும் கலந்துகொள்கின்றனர்.

தற்போது இந்நிகழ்வில், சாய் சின்னகதா பாராயணம், இறைவனுடன் இனிய அனுபவங்கள், சத்தியோபனிஷத் ஆகிய கற்றல் நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. அதுமட்டுமல்லாது, ஒவ்வொரு நிகழ்விலும் சாயி காயத்ரி பாராயணமும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

# சாயி புரத சத்து மாவு வழங்கும் சேவை

காஞ்சிபுரம் தெற்கு

284 பயனாளிகள்

26 சேவாதளத்தொண்டர்கள்

நமது பிரியமான பகவானின் பேரன்பு கலந்த நல்லாசியுடனும், "சுவாமியின் அன்பு ஆயிரம் அன்னையர்களின் அன்பிற்குச் சமம்", என்ற கூற்றிற்கேற்பவும் ஒவ்வொரு மாதமும் தேகபலத்தையும் மனபலத்தையும் தந்திடும் சாயி புரதச் சத்து மாவானது காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள சமிதிகளால், தேவைப்படுவோருக்கு தானமாக வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஜூன் மாதத்தில் ஸ்ரீபெரும்புதூர் சேவா சமிதி, பெருங்களத்தூர் சேவா சமிதி, தாம்பரம் சேவா சமிதி, ஆகிய சமிதிகள், இந்தப் புனிதமான சேவையில் பங்கேற்று பகவானுக்கு மகிழ்ச்சி அளித்தன.

ஸ்ரீபெரும்புதூர் சேவா சமிதியின் சார்பாக ஸ்ரீபெரும்புதூரில் அமைந்துள்ள தயானந்த சரஸ்வதி கிருபா இல்லம் என்ற அமைப்பிற்கு 18/06/2025 அன்று நமது ஸ்வாமியின் கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் தயாரித்தளித்த 30 கிலோ சாயி புரதச் சத்து மாவை, ஸ்ரீபெரும்புதூர் சமிதி அங்கத்தினர்கள் அந்த விடுதியின் தலைவர் முனைவர். கிரிதர் அவர்களிடம் வழங்கினர்.. இதில் ஸ்ரீபெரும்புதூர் சமிதி அங்கத்தினர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்று நமது பகவானின் திருப்பணியில் தங்களை அர்ப்பணித்துக்கொண்டனர்.

தாம்பரம் சேவா சமிதியின் சார்பாக தாம்பரம் சமிதி மகளிர் குழு 19/06/2025 அன்று குரோம்பேட்டையில் உள்ள பொது மருத்துவமனைக்குச் சென்று அங்கு உள்ள கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் என 125 பேருக்கு சாய் புரதச் சத்து மாவை விநியோகம் செய்தனர். சாய் புரதச் சத்து மாவு அனந்தபூர் கல்லூரியின் முன்னாள் மாணவிகளின் பொருளாதார உதவியுடன் தயார் செய்யப்பட்டது.

பெருங்களத்தூர் சேவா சமிதியின் சார்பாக, சமிதியின் அங்கத்தினர்கள் தாமாகவே சாய் புரதச் சத்து மாவிற்கான மூலப்பொருட்களை தரமான முறையில் கொள்முதல் செய்து, அதனை சுத்தமான முறையில் வறுத்தரைத்து, நன்கு ஆறவைத்து, கலந்து, அதனைப் பொட்டலங்களாகக்கட்டி, 14/06/2025 அன்று செங்கல்பட்டு அரசு மருத்துவமனையிலும், தாம்பரம் சானடேரியம் காசநோய் மருத்துவமனையிலும், சுமார் 127 பேருக்கு சாய் புரதச் சத்து மாவு பொட்டலங்களை இலவசமாக வழங்கினர். இதில் பெருங்களத்தூர் சேவா சமிதி அங்கத்தினர்கள் தங்களை மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபடுத்திக்கொண்டனர்.





## சிறப்பு நாராயண சேவை

காஞ்சிபுரம் தெற்கு

609 பயனாளிகள்

70 சேவாதளத்தொண்டர்கள்

நமது பிரியமான பகவானின் பேரன்பு கலந்த நல்லாசிகளுடன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள சமிதிகள் ஒவ்வொரு மாதமும் தங்களின் சமிதியைச் சுற்றியுள்ளோருக்கு நாராயண சேவை செய்துவருகின்றன. "மானவ சேவையே மாதவ சேவை" என்ற கூற்றிற்கிணங்க சமுதாயத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களுக்கு நமது சாயி அன்பர்கள் உணவளித்து பகவானுக்குத் தொண்டாற்றி வருகின்றனர். அந்த வகையில் கடந்த ஜூன் மாதத்தில், மறைமலை நகர் சேவா சமிதி, தாம்பரம் சேவா சமிதி, கூடுவாஞ்சேரி சேவா சமிதி, பூண்டி பஜார் சேவா சமிதி, ஆகிய சமிதிகள், இந்த சேவையில் ஈடுபட்டன.

மறைமலை நகர் சேவா சமிதியின் சார்பாக, வரவிருக்கும் நமது பகவானின் 100வது பிறந்தநாளை முன்னிட்டு 02/06/2025, மற்றும் 25/06/2025 ஆகிய தினங்களில் மறைமலைநகரைச் சுற்றியுள்ள இடங்களில் நாராயண சேவை நடைபெற்றது. இதன்மூலம் மொத்தமாக 56 பேர் பயனடைந்தனர். இதில் சமிதி அங்கத்தினர்கள், பாலவிகாஸ் மாணவச்செல்வங்கள் ஆகியோர் பங்கேற்று பகவானின் அருளைப் பெற்றனர்.

தாம்பரம் சேவா சமிதியின் சார்பாக, நித்ய நாராயண சேவை

திட்டத்தின் கீழ் தினமும் சமிதியின் ஒரு உறுப்பினர் நாராயண சேவை செய்து வருகின்றார். அந்த வகையில் கடந்த மாதத்தில் மொத்தமாக 183 பேர் பயனடைந்தனர்.

கூடுவாஞ்சேரி சேவா சமிதியின் சார்பாக 08/06/2025 அன்று மறைமலை நகரில் உள்ள பார்வைக்குறை பாடுள்ளவர்கள் தங்கியிருக்கும் பகுதியிலும், கூடுவாஞ்சேரியிலுள்ள இருளர் குடியிருப்பு பகுதியிலும், சாலையோர குடும்பங்களுக்கும், கூடுவாஞ்சேரி பேருந்து நிலையத்தில் உள்ள பொது மக்களுக்கும், என சுமார் 185 பேருக்கு நாராயண சேவை நடைபெற்றது. இந்த சேவைக்கான உணவை சமிதி அங்கத்தினர்கள் மற்றும் பாலவிகாஸ் மாணவச்செல்வங்களின் பெற்றோர், தங்கள் இல்லங்களில் சமைத்து பொட்டலங்களாக போட்டு வழங்கினர்.

பூண்டி பஜார் சேவா சமிதியின் சார்பாக 01/06/2025 அன்று நாராயண சேவை நடைபெற்றது. இந்த சேவைக்கு தேவையான உணவு, சமிதியின் பொது சமையல் கூடத்திலிருந்தும், சாயி அன்பர்களின் இல்லங்களில் இருந்தும் தயாரிக்கப்பட்டது. அவை அனைத்தும் பொட்டலங்களாக போடப்பட்ட பின்னர், விநியோகிக்கப்பட்டன. மொத்தமாக 185 பேர் இந்த சேவையின் மூலம் பயனடைந்தனர்.



# திருக்கோவில்களில் ஏகாதச ருத்ர பாராயணம் மற்றும் சிறப்பு அபிஷேகம்

காஞ்சிபுரம் தெற்கு

637 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையினால் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட சமிதிகள் தங்களுக்கு அருகில் உள்ள திருக்கோவில்களில், முக்கியமாக சிவாலயங்களில் ஏகாதச ருத்ர பாராயணம் மற்றும் சிவபெருமானுக்கு ருத்ராபிஷேகம் ஆகியவற்றை செய்து பகவானின் பேரருளைப் பெற்றுவருகின்றனர்.

செங்கல்பட்டு சேவா சமிதி மற்றும் அதன் பஜனை மண்டலியான, ஆத்தூர் பஜனை மண்டலி ஆகியவை இணைந்து பகவானின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 08/06/2025 அன்று செங்கல்பட்டில் உள்ள அருள்மிகு ஸ்ரீ தர்மசம்வர்தினி அம்பாள் சமேத ஸ்ரீ முக்தீஸ்வரர் திருக்கோவிலில் இந்த நிகழ்ச்சியை நடத்தினர். இதில் ஸ்ரீ முக்தீஸ்வரருக்கு 21 திரவியங்களால் வெகு சிறப்பான அபிஷேகம் நடைபெற்றது.

இதில் செங்கல்பட்டு சமிதி அங்கத்தினர்கள் மட்டுமல்லாது, காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து சமிதி அங்கத்தினர்கள், பாலவிகாஸ் மாணவச்செல்வங்கள் மற்றும் அவர்களின் பெற்றோர், நமது ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனத்தின் மாவட்ட மற்றும் மாநில பொறுப்பாளர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

தாம்பரம் சேவா சமிதியின் சார்பாக பக்தர்கள் தொடர்பு திட்டத்தின் கீழ் மாதத்தின் அனைத்து சனிக்கிழமைகளிலும் பக்தர்களின் இல்லங்களில் ருத்ர பாராயணம் செய்து வந்தனர். அதன் 100 ஆவது நிகழ்வை முன்னிட்டு தாம்பரம் அடுத்த, மண்ணிவாக்கத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீ மரகதாம்பிகை அம்பாள் சமேத ஸ்ரீ மண்ணீஸ்வரர் திருக்கோவில் 22/06/2025 அன்று இந்நிகழ்வை நடத்தினர். இதில் ஸ்ரீ மண்ணீஸ்வரருக்கு சிறப்பு அபிஷேகங்கள் நடைபெற்றன.

மேலும், இந்நிகழ்வின் நினைவாக ஸ்ரீ சத்ய சாயி பிரேம தரு திட்டத்தின் கீழ் திருக்கோவில் வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன. இந்த மங்களகரமான சந்தர்ப்பத்தில் சுமார் 200 பார்வையாளர்களுக்கு சனாதன சாரதி புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டன. சனாதன சாரதி சந்தாவிற்கு 20 பக்தர்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டனர். மேலும், திருக்கோவிலில் பணியாற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு வஸ்திர தானம் நடைபெற்றது.

திருக்கோவிலில் வீற்றிருக்கும் மூல மூர்த்திக்கும், மற்ற பரிவார மூர்த்திகளுக்கும் புது பட்டு வஸ்திரங்கள் அன்புடன் சமர்ப்பிக்கப்பட்டன. இதில் தாம்பரம் சமிதி அங்கத்தினர்கள் மட்டுமல்லாது, காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து சமிதி அங்கத்தினர்கள், பாலவிகாஸ் மாணவச்செல்வங்கள் மற்றும் அவர்களின் பெற்றோர், நமது ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனத்தின் மாவட்ட மற்றும் மாநில பொறுப்பாளர்கள் என பலர் கலந்துகொண்டனர். அதுமட்டுமல்லாது திருக்கோவிலின் கோசாலையில் சிறப்பு கோ பூஜை நடைபெற்றது.

இறுதியாக பகவானுக்கும், ஸ்ரீ மண்ணீஸ்வர சுவாமிக்கும் மகா

மங்கள ஆரத்தி அர்ப்பணிக்கப்பட்டு, நிகழ்ச்சி நிறைவுற்றது. மண்ணிவாக்கம் சேவா சமிதியின் பாலவிகாஸ் மாணவச்செல்வங்கள் பகவானுக்கு கைலாய வாத்திய நிகழ்வை சமர்ப்பித்தது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆலயமானது, நமது பகவானின் சத்சரித்திரத்தில் ஓர் சிறப்பு வாய்ந்த இடத்தைப் பெற்றுள்ளது. நம் சுவாமி 1983 ஆம் ஆண்டு இந்த திருக்கோவிலுக்கு, தனது தமிழ்நாடு விஜயத்தின் போது வருகை தந்தார். சுவாமி, கோயில் பூசாரியை "சிவாச்சாரியார்" என்று பட்டத்துடன் அழைத்தார். சுவாமிக்கு ஆரத்தி கொடுக்க பக்தர்கள் கற்பூரத்தைத் தேடியபோது, சுவாமி அன்புடன் ஒரு ரோஜா பூவை கற்பூரமாக மாற்றினார். சந்நிதியின் கருவறைக்குள் சிவபெருமானுடன் சுவாமி புகைப்படம் எடுத்துக் கொண்டார்.





# தையல் மற்றும் ஆரி பயிற்சி சான்றிதழ் வழங்குதல்

காஞ்சிபுரம் தெற்கு

60 பயனாளிகள்

10 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் தெய்வீக ஆசீர்வாதத்துடன், மறைமலை நகர் சேவா சமிதியின் சார்பாக சட்டமங்கலம் கிராமத்தில் உள்ள ஸ்ரீ சத்ய சாயி திறன் மேம்பாட்டு மையத்தில் தையல் மற்றும் ஆரி வேலை பயிற்சி வகுப்பின் 5 ஆம் குழு வெற்றிகரமாக தங்களின் பயிற்சியை முடித்தனர். அதனை முன்னிட்டு அவர்கள் அனைவருக்கும் சான்றிதகள் வழங்கப்பட்டன. அத்துடன்சேர்த்து, பயிற்சி வகுப்பின் 6 ஆம் குழுவும் வெற்றிகரமாக தொடங்கப்பட்டது. திருமதி யசோதா சாய்ராம் மற்றும் திருமதி ரம்யலக்ஷ்மி சாய்ராம் ஆகியோர் தையல் மற்றும் ஆரி வகுப்புகளை எடுக்க தன்னார்வலராக தங்களை இணைத்துக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

அதேபோல் பூண்டி பஜார் சேவா சமிதியின் சார்பாக, ஸ்ரீ சத்ய சாயி திறன் மேம்பாட்டு திட்டத்தின் கீழ், இலவச தையல் மற்றும் ஆரி பயிற்சிகளை வெற்றிகரமாக முடித்த மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இதுவரை 9 குழுக்கள் இந்த பயிற்சியை வெற்றிகரமாக முடித்துள்ள நிலையில் தற்போது 10 ஆவது குழுவும் இந்தப் பயிற்சியை வெற்றிகரமாக முடித்துள்ளது. ஒவ்வொரு குழுவிலும் சராசரியாக 30 மாணவிகள்

பங்கேற்றனர்.

இந்த 10 ஆவது குழுவிலும் 30 மாணவிகள் பங்கேற்று, 2 ஆசிரியபெருமக்களின் வழிகாட்டுதலால் தையல் மற்றும் ஆரி கலைகளைக் கற்றுத்தேர்ந்தனர்.





# தையல் மற்றும் ஆரி பயிற்சி வகுப்பின் தொடக்க விழா

காஞ்சிபுரம் தெற்கு

30 பயனாளிகள்

10 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையினால் மண்ணிவாக்கம் சேவா சமிதியின் சார்பாக 24/06/2025 அன்று ஸ்ரீ சத்ய சாயி திறன் மேம்பாட்டு திட்டத்தின் கீழ், மகளிருக்கான இலவச தையல் மற்றும் ஆரி பயிற்சி வகுப்புகளின் முதல் குழு தொடங்கி வைக்கப்பட்டது. இதில் ஆசிரியை, திருமதி. பிரேமா விஜயகுமார் சாய்ராம் அவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் மாணவிகளுக்கு தையல் மற்றும் ஆரி பயிற்சியினை கற்றுக்கொடுத்தார். மொத்தமாக 15 மாணவிகள் இதில் கலந்துகொண்டு, பயனடைந்தனர்.

அதேபோல் பார்வதி நகர் சேவா சமிதியின் சார்பாக, கரசங்கால் கிராமத்தில் அமைந்துள்ள பொதுக்கூடத்தில் ஆரி வேலை பற்றிய பயிற்சி தொடங்கப்பட்டது.

இதில் மொத்தமாக 11 பெண்கள் கலந்துகொண்டு, அடுத்து வரவிருக்கும் 45 நாட்களுக்கு இந்த கலையை கற்று தேர்ச்சிபெற உள்ளனர்.





# நடமாடும் மருத்துவ முகாம் மற்றும் கண் மருத்துவ முகாம்

காஞ்சிபுரம் தெற்கு | 15.6.25 | 107 பயனாளிகள்

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தின் சார்பில் மாதாந்திர இலவச நடமாடும் மருத்துவ முகாம் மற்றும் இலவச கண் மருத்துவ முகாம் வழக்கம் போல், ஜுன் மாதம் 15 ஆம் நாள் தாம்பரம் சமிதியின் தத்து கிராமமான ஆரம்பாக்கம் என்னும் கிராமத்தில் ஸாயி கார்டன்ஸ் என்னுமிடத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இம் முகாமிற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் தாம்பரம் சமிதியின் கன்வீனர் மற்றும் சமிதி உறுப்பினர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து சிறப்புற செய்திருந்தனர். நடமாடும் மருத்துவ முகாமின் இயக்குனரும் மருத்துவருமான திரு நாகராஜு ஸாயிராம் அவர்களின் தலைமையில் கீழ்கண்ட மருத்துவ வல்லுனர்கள் குழு முகாமிற்கு வந்திருந்த அனைத்து பயனாளிகளையும் அன்புடன் பரிசோதித்து தேவையான மருந்துகளை பரிந்துரைத்தனர். அவர்கள் அனைவருக்கும் ஒரு மாதத்திற்குத் தேவையான மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டன.

கலந்து கொண்ட மருத்துவ குழுவினர் :
1. மரு. திரு சேஷகிரி ஸாயிராம் அவர்கள், நெஞ்சக நோய் நிபுணர்.
2. மரு. திருமதி அனுராதா ஸாயிராம் அவர்கள். குழந்தை நல மருத்துவர்.

3. மரு. திரு யோகேஷ்வரன் ஸாயிராம் அவர்கள், பல் மருத்துவர்.
4. மரு. சீனிவாஸ் ஸாயிராம் அவர்கள் ,பொது மருத்துவர்.
5. மரு. அஸ்வின் ஸாயிராம் அவர்கள் , தீவிர சிகிச்சை மருத்துவர்

இவர்களுக்கு உதவியாக பார்வை மருத்துவ உதவியாளர், ஊடுகதிர் தொழில் நுட்ப வல்லுனர், இ.சி.ஜி தொழில் நுட்ப வல்லுனர் ஆய்வக உதவியாளர், யோகப் பயிற்சி வல்லுனர் உளவியல் வல்லுனர் மற்றும் மருந்தாளுனர் ஆகியோரும் இம் முகாமில் கலந்து கொண்டனர். இம் முகாமில் 107 பயனாளிகள் கலந்து கொண்டனர். இவர்களில் கண் பரிசோதனை செய்து கொண்டவர்களில் கண் புரை அறுவை சிகிச்சைக்கு தேர்வு செய்யப்பட்டவர்கள் 8 பேர் ஆவர். இவர்கள் அனைவரும் முகாம் முடிவுற்ற பின் பம்மல் சங்கரா கண் மருத்துவமனைக்கு அறுவை சிகிச்சைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

ஆய்வக இரத்த பரிசோதனைகள் 123 பயனாளிகளுக்கு மேற்கொள்ளப்பட்டன. கண் கண்ணாடிகள் 5 பயனாளிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.யோகா பயிற்றுனர் அவர்கள் பயனாளிகளுக்கு யோகப் பயிற்சியினை அளித்தார் மருத்துவரின் பரிந்துரையின் பேரில் தகுதி வாய்ந்த 50 பயனாளிகளுக்கு ஸாயி புரதச்சத்து மாவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. 10 பயனாளிகள் தங்கள் பற்களை பல் மருத்துவரிடம் பரிசோதனை செய்து கொண்டனர்.

மானவ சேவையே மாதவ சேவை என்பதனைக்கருத்தில் கொண்டு இவ் உயரிய சேவைதனை பயனாளிகளுக்கு ஆற்றிட பல சமிதிகளில் இருந்தும் ஆண் சேவாதளத் தொண்டர்களும் பெண் சேவாதளத் தொண்டர்களும் முகாமிற்கு வருகை புரிந்து சேவையாற்றினர்.

முகாமிற்கு வருகை தந்த அனைவருக்கும் காலை உணவு மதிய உணவு ஆகியன வழங்கப்பட்டன. இறுதியாக பகவானுக்கு மங்கள ஆரத்தி காட்டப்பட்டு முகாம் இனிதே நிறைவுற்றது





# நீர் மோர் வழங்கும் சேவை

காஞ்சிபுரம் தெற்கு

760 பயனாளிகள்

12 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையினால் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட சமிதிகள், தற்போது நிலவும் கோடை காலத்தில், சுட்டெரிக்கும் வெயிலில் வாடுவோர்களுக்கு நீர் மோர் வழங்கும் சேவையை செய்துவருகின்றனர். அவ்வாறு மக்களின் தாகத்தை தணித்தும், அவர்களை மகிழ்ச்சிப்படுத்தியும், பகவானுக்கு தொண்டு புரிகின்றனர். அந்த வைகையில் கடந்த ஜூன் மாதத்தில் மறைமலை நகர் சேவா சமிதி, இந்த சேவைப் பணியில் ஈடுபட்டது. மொத்தமாக 760 குவளை நீர் மோர் பகவானின் அருளால் வழங்கப்பட்டது. இந்த புனிதமான சேவையில் சாயி அன்பர்கள், பாலவிகாஸ் மாணவச்செல்வங்கள், அவர்களின் பெற்றோர் ஆகியோர் பங்கேற்று பகவானின் அருளைப் பெற்றனர்.





# பள்ளி பாலவிகாஸ் வகுப்புகள்

காஞ்சிபுரம் தெற்கு 19.6.25 **89** பயனாளிகள்

**89** சேவாதளத்தொண்டர்கள்

நமது பகவானின் கருணையால் காஞ்சிபுரம் கலெக்டிரேட் சமிதி சார்பாக மாருதி மழலையர் பள்ளியில் பள்ளி பாலவிகாஸ் வகுப்புகள் புதிதாகத் தொடங்கப்பட்டன. இந்த பள்ளியில் 3, 4 மற்றும் 5ஆம் வகுப்புகளில் உள்ள 89 மாணவர்கள் பங்கு பெற்றனர்.



# பாலவிகாஸ் விழிப்புணர்வு பிரச்சாரம்

காஞ்சிபுரம் தெற்கு 22.6.25 **30** பயனாளிகள்

**8** சேவாதளத்தொண்டர்கள்

நமது பகவானின் பாலவிகாஸ் திட்டம் மேலும் பல குழந்தைகளை சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் கடந்த ஜூன் 22 ம் தேதி விழிப்புணர்வு பிரச்சாரம் நடத்தப்பட்டது. புதிதாக பாலவிகாஸ் குழந்தைகளை சேர்ப்பதற்கு கரும்பூர் கிராமத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று பெற்றோர்களைச் சந்தித்து பாலவிகாஸ் விழுக்கல்வியின் (EDUCARE) அவசியம், முக்கியத்துவம் மற்றும் பயனையும் எடுத்துக்கூறி அவர்களின் குழந்தைகளை பாலவிகாஸ் வகுப்புகளில் சேர்ந்து பயன்பெற வலியுறுத்தப்பட்டது. இதில் பாலவிகாஸ் குழந்தைகள் 7 பேரும் குரு ஒருவரும் பங்கேற்றனர். 13 புதிய குழந்தைகள் சேர்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# புதிய பாலவிகாஸ் மையத் தொடக்க விழா

**காஞ்சிபுரம் தெற்கு** 29.6.25 **12** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையினால் பெரிய காஞ்சிபுரம் சேவா சமிதியின் சார்பாக 29/06/2025 அன்று புதிய பாலவிகாஸ் மையம் ஒன்று தொடக்கப்பட்டது. இதில் மொத்தம் 10 மாணவச்செல்வங்கள் கலந்துகொண்டு பாலவிகாஸ் முதலாம் பிரிவில் இணைந்து பகவானின் அருளைப் பெற்றனர்.



# மாதாந்திர மகிளா தினம்

காஞ்சிபுரம் தெற்கு 19.6.25 35 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையினால் பூண்டி பஜார் சேவா சமிதியின் சார்பாக 19/06/2025 அன்று சமிதியில் மாதாந்திர மகிளா தினம் கொண்டாடப்பட்டது. இதில் சிறப்பு நிகழ்வாக மதியம் 3:00 மணியளவில் மகளிருக்கு யோகா பயிற்சி வகுப்புகள் பகவானின் அருளால் துவங்கின. ஒவ்வொரு வாரமும் மூன்று நாட்கள் இந்த பயிற்சி வகுப்புகள் நடைபெறும். இதில் மகளிர் மிகுந்த ஆர்வத்துடன் கலந்துகொண்டு பயனடைந்தனர். மாலை 6:00 மணிக்கு சிறப்பு பஜனை நடைபெற்றது.



# ஸ்ரீ சத்ய சாயி அமிர்த கலசம் விநியோகம்

**காஞ்சிபுரம் தெற்கு** **30** பயனாளிகள்

**4** சேவாதளத்தொண்டர்கள்

நமது பிரியமான பகவானின் பேரன்பு கலந்த நல்லாசிகளுடன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள சமிதிகள் ஒவ்வொரு மாதமும் தங்களின் சமிதியைச் சுற்றியுள்ளோருக்கும், தங்களின் சமிதியைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கும் சென்று அங்குள்ளோருக்கு, நமது பகவானால் தொடங்கி வைக்கப்பட்ட "அமிர்த கலசம்" என்னும் பகவானின் பிரசாதத்தை இலவசமாக வழங்கி வருகின்றன. இந்த அமிர்த கலசத்தில் ஒரு மாதத்திற்கு தேவையான மளிகை பொருட்களும், குளியல் பொருட்களும் அடங்கி உள்ளன. கடந்த ஜூன் மாதத்தில், மறைமலை நகர் சேவா சமிதி, ஸ்ரீபெரும்புதூர் சேவா சமிதி, ஆகிய சமிதிகள் இந்த சேவையில் ஈடுபட்டன.

மறைமலை நகர் சேவா சமிதியின் சார்பாக, 02/06/2025 அன்று மறைமலை நகர் சமிதியைச் சுற்றியுள்ள 9 குடும்பங்களுக்கு அமிர்த கலசங்கள் வழங்கப்பட்டன.

ஸ்ரீபெரும்புதூர் சேவா சமிதியின் சார்பாக 02/06/2025 அன்று சமிதியின் தத்து கிராமமான, நந்திமேடு கிராமத்தில் உள்ள ஒரு குடும்பத்திற்கு 1 அமிர்த கலசம் வழங்கப்பட்டது.

# சேவா வாணி

ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம் (இந்தியா)

தமிழ்நாடு - தெற்கு

ஜூன் 2025

Love All, Serve All
Help Ever, Hurt Never





# 100 இல்லங்களில் பஜனை

காஞ்சிபுரம் வடக்கு 9.6.25 **150+** சேவாதளத்தொண்டர்கள்

நமது சுவாமியின் பரிபூரண அருளாசியோடு, அவரது 100வது பிறந்தநாளைக் கொண்டாடும் விதமாக, 100 இல்லங்களில் சிறப்பு பஜனை, ஜூன் 9, 2025 தொடங்கி, அனைத்து சாயி அன்பர்களின் வரவேற்பைப் பெற்று தொடர்ந்து சிறப்பாக நடைபெற்று வருகிறது.





# புதிய தையல் வகுப்பு

காஞ்சிபுரம் வடக்கு 26.6.25 95 சேவாதளத்தொண்டர்கள்

ஜூன் 26 இல் நடைபெற்ற புதிய தையல் வகுப்பு சேர்க்கையில், மடிப்பாக்கம் மற்றும் சுற்றுப்புறத்தைச் சேர்ந்த பெண்கள் மிகுந்த ஆர்வம் காட்டினர். மொத்தம் 95 பெண்கள் தையல் கற்றுக்கொள்ள ஆர்வத்துடன் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளனர். "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா அவர்களின் வழிகாட்டுதலின் படி, இந்த சேவை தொடர்ந்து பல ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றது.



# ஷீர்டி பாபா கோவிலில் சாய் பஜனை

காஞ்சிபுரம் வடக்கு

16.6.25

20 பயனாளிகள்

16 சேவாதளத்தொண்டர்கள்

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், சிட்லபாக்கம் சமிதி அன்பர்கள் கடந்த 3 வருடமாக, ஒவ்வொரு மாதமும், சமிதிக்கு அருகில் உள்ள ஷீரடி பாபா கோவிலில் பஜனை செய்து வருகின்றனர். இம்மாதம், ஜூன் 16ஆம் தேதி, சாய் பஜனை நடைபெற்றது. 15க்கும் மேற்பட்ட சமிதி அன்பர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டு பகவானின் அருளினைப் பெற்றனர்.



# உலகச் சுற்றுச்சூழல் தினம் - மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி

கோயம்புத்தூர் 5.6.25

ஸ்வாமியின் பெரும் கருணையினால் கோயம்புத்தூர் மாவட்டம் வடவள்ளி சமிதி சார்பாக உலகச் சுற்றுச்சூழல் தினமாகிய 5.6.2025 அன்று பள்ளி மாணவர்களுக்கு (அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, தொண்டாமுத்தூர்) 630 மரக்கன்றுகள் வழங்கி, மரம் நடுவதன் முக்கியத்துவத்தையும், இயற்கையை மரம் எப்படி பாதுகாக்கிறது என்பதை பற்றியும் எடுத்துரைத்து, அனைவரையும் இந்தப் புனிதச் சேவையில் பங்கேற்க அறிவுறுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனத்தை சேர்ந்தவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

அன்றைய தினம் குப்பநாயக்கன்பாளையம் சமிதிக்கு 109 மரக்கன்றுகள் வழங்கி அதில் ஒரு பகுதியும் நடப்பட்டது. முக்கியமாக புட்டபர்த்தியிலிருந்து பெறப்பெற்ற தியான விருட்சத்தையும்(ஆலமரம்) நட்டு பய பக்தியுடன் வழிபாடு செய்யப்பட்டது.

## ஏகாதச ருத்ர பாராயணம்

**கோயம்புத்தூர்** 15.6.25 **120** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் அவதார நூற்றாண்டு கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, கோவை மாவட்டம் ஸ்ரீ சத்ய சாயி நிறுவனங்களான மேட்டுப்பாளையம் அன்னபூரணி பேட்டை மற்றும் கூட்டுறவுக் காலனி சமிதிகள் சார்பாக அன்னபூரணி பேட்டை சமிதியில் (பகவான் அருட் கரங்களால் தொடங்கப்பட்ட சமிதி) 100 சிவாலயங்களில் ஒன்றாக 48 (48/100 )வதாக ஏகாதச ருத்ர பாராயணம் கோவை மாவட்டம் வேதம் குழு மூலம் பாராயணம் செய்யப்பட்டு, இந்நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக அமைந்தது.

காலை 9 மணி முதல் பகல் 12.30 மணி வரை நடந்த இந்த நிகழ்ச்சியில் பாலவிகாஸ் குழந்தைகளின் வேத பாராயணம் மற்றும் ஸ்ரீ சத்ய சாயி பஜனையும் பாடப்பட்டது . பின்பு ருத்ர பாராயணம் 11 முறை பாராயணம் செய்யப்பட்டது. அதன்பின் சிவலிங்கத்திற்கு அபிஷேக அலங்காரம் நடைபெற்றது. இறுதியில் மகா மங்கள ஆரத்தியுடன் நிகழ்ச்சி இனிதாக நிறைவு பெற்றது. இதில் 7 குழந்தைகள், 56 பெண்கள் மற்றும் 57 ஆண்கள் கலந்து கொண்டனர்.

# ஏகாதச ஸ்ரீ ருத்ர பாராயணம்

கோயம்புத்தூர் 22.06.2025 150 பயனாளிகள்

150 சேவாதளத்தொண்டர்கள்

ஸ்வாமியின் பெரும் கருணையினால் 22.6.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று கோயம்புத்தூர் மாவட்டம் மேட்டுப்பாளையம் சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ நாகசாயி மந்திரில் (ஸ்ரீ சீரடி சாய்பாபா திருக்கோவில்) தொடக்க நிகழ்ச்சியாக காலை 8:30 மணியளவில் ஏகாதச ஸ்ரீ ருத்ர பாராயணம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஸ்ரீ சத்ய சாயி பஜனையும் நடத்தப்பட்டது.

ஸ்வாமியின் அவதார நூற்றாண்டுக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக 100 சிவாலயங்களில் ஸ்ரீ ருத்ர பாராயணம் செய்யப் பிரார்த்தனை செய்து கொண்டதில் இன்றைய தினம் 50 வது பாராயணம் இத்திருக்கோவிலில் பாடப்பட்டது மேலும் சிறப்பு.

இத்திருக்கோயில் மூலஸ்தானத்தில் உள்ள ஸ்ரீ சீரடி சாய்பாபாவின் பளிங்குக் சிலை நம் பகவானின் திருக்கரங்களால் 26.2.1961 அன்று நிறுவப்பட்டது என்பது சிறப்பு. இந்த பாராயணத்தில் சுமார் 150க்கும் மேற்பட்ட பக்தர்கள் - கோயம்புத்தூர், மேட்டுப்பாளையம் மற்றும் திருப்பூர் பகுதிகளில் இருந்து வந்து கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

# ஸ்ரீ சத்ய சாயி பஜனா மண்டலி மூன்றாம் ஆண்டு விழா

கோயம்புத்தூர் 17.6.25 **30** சேவாதளத்தொண்டர்கள்

ஸ்வாமியின் பெரும் கருணையினால் கோயம்புத்தூர் மாவட்டம் மேட்டுப்பாளையம் ஆலாங்கொம்பில் அமைந்துள்ள ஸ்ரீ சத்ய சாயி பஜனா மண்டலியின் மூன்றாம் ஆண்டு விழாவை முன்னிட்டு 17.6.2025 அன்று மேட்டுப்பாளையம் அன்னபூரணி பேட்டை, கூட்டுறவு காலனி மற்றும் வீரபாண்டிப் பிரிவு சமிதிகள் இணைந்து காலை 11 மணி முதல் பகல் 12.30 மணி வரை சிறப்பு சாயி பஜனையுடன், அனுமன் சாலிசாவும் பாடினார். இறுதியில் மகா மங்கள ஆர்த்தியுடன் நிகழ்ச்சிகள் நிறைவுற்றது. இதில் 18 பெண்கள் மற்றும் 18 ஆண்கள் கலந்து கொண்டனர்.

# 100 நாள் கிருஹ பஜனை

தஞ்சாவூர் | 01-06-2025 - 30-06-2025 | 120 பயனாளிகள் | 120 சேவாதளத்தொண்டர்கள்

நம் ஸ்வாமியின் 100வது பிறந்தநாள் விழாவினை ஒட்டி கும்பகோணம் சமிதியின் சார்பாக 100 நாள் சிறப்பு பஜனை நம் பாலவிகாஸ் குருமார்களின் இல்லங்கள், பாலவிகாஸ் முன்னாள் மாணவர்களின் இல்லங்கள், பாலவிகாஸ் குழந்தைகளின் இல்லங்கள் என அனைவரின் இல்லங்களிலும் நடைபெற்று வருகிறது.

ஒவ்வொரு வீட்டிற்கும் சுவாமி தன் அங்கி மற்றும் பாதுகையின் மூலம் வருகை தருகிறார். இந்த பஜனைகளில் பங்கேற்பதற்காக பாலவிகாஸ் குழந்தைகள் தத்தம் குருமார்களிடம் புதுப்புது பஜனைகளை கற்றுக்கொண்டு அதனை சிறந்த முறையில் பாடுவதற்காக பயிற்சியும் செய்து நல்முறையில் பஜனைகளைப் பாடி மகிழ்கின்றனர். பஜனையின் முடிவில் குழந்தைகளை ஊக்குவிக்கும் விதமாக ஸ்வாமியின் அருட்ப்ரசாதம் அனைவருக்கும் வழங்கப்படுகிறது.

மிகவும் உற்சாகத்துடன் பாலவிகாஸ் மாணவர்களும் குருமாரும் பங்கேற்று வருகின்றனர்.





# அருட்கஞ்சி விநியோகம்

தஞ்சாவூர் 28.6.25 **600** பயனாளிகள்

**10** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் பாபாவின் ஆசியுடனும் அருளுடனும் தஞ்சாவூரில் உள்ள ஆர்.எம். மருத்துவமனையில் மெஹர்நோன்புச்சாவடி சமிதியின் 10 சேவதள தொண்டர்களால் 600 பேருக்கு அருட்கஞ்சி விநியோகிக்கப்பட்டது.

# ஆன்மீக சாதனா முகாம்

தஞ்சாவூர் | 01, 15, 22.06.2025 | **13** பயனாளிகள் | **46** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் பாபாவின் ஆசியுடனும் அருளுடனும் தஞ்சாவூர் மெஹர்நோன்புச்சாவடி சமிதி நடத்திய பக்திநெறி நிகழ்ச்சி மிகச்சிறப்பாக நடைபெற்றது இதில் 26 சாய் பக்தர்கள் கலந்து கொண்டனர். மற்றும் ஜூன் 15, 2025 அன்று தஞ்சாவூர் மெஹர்நோன்புச்சாவடி சமிதியில் பக்திநெறி நிகழ்ச்சி நடத்தப்பட்டது. கிட்டத்தட்ட 20 பேர் பயனடைந்தனர். மற்றும் ஜூன் 22, 2025 அன்று பக்தி நெறி நிகழ்ச்சி மகர்நோன்பு சாவடி சமிதியில் சிறப்பாக நடைபெற்றது.



# நீர்மோர் விநியோகம்

**தஞ்சாவூர்** 1.6.25 **33480** பயனாளிகள்

**88** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் பாபாவின் ஆசியுடனும் அருளுடனும் மார்ச் 20 முதல் ஜூன் 1 வரை பொதுமக்களுக்கு கும்பகோணம் சமிதி சார்பாக நீர்மோர் வழங்கப்பட்டது. மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை 33480. சமிதி அன்பர்கள் 88 நபர்கள் இந்த சேவை சிறப்பாக நடைபெற உதவினர்.



# பாலவிகாஸ் பஜனை

தஞ்சாவூர் | 28.6.25 | 45 பயனாளிகள் | 45 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேரருளால் ஒவ்வொரு மாதமும் நான்காவது சனிக்கிழமை அன்று கும்பகோணம் ஸ்ரீ ஸத்ய ஸாயி சேவா சமிதியில் பாலவிகாஸ் மாணவர்களால் ஸாயி பஜனை சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. ஜூன் மாதத்தின் பாலவிகாஸ் பஜனை கடந்த ஜூன் 28 ம் தேதி சிறப்பாக நடைபெற்றது. பாலவிகாஸ் பாடத்திட்டத்தில் அல்லாத பிற பஜனை பாடல்களையும் பாலவிகாஸ் மாணவர்கள் கற்றுக் கொண்டு உற்சாகத்துடன் பாடி மகிழ்ந்தனர். இந்நிகழ்ச்சியில் பாலவிகாஸ் மாணவர்கள், முன்னாள் பாலவிகாஸ் மாணவர்கள், குருமார்கள், பெற்றோர்கள் மற்றும் சாயி அன்பர்கள் கலந்துக்கொண்டனர். நிகழ்ச்சியின் முடிவில் அனைவருக்கும் ஸ்வாமியின் அருட்ப்ரசாதம் வழங்கப்பட்டது.





# பாலவிகாஸ் பிரிவு 2 & 3 தேர்வுகளுக்கு சிறப்பு வகுப்புகள்

தஞ்சாவூர் 01-06-2025 - 30-06-2025 17 பயனாளிகள் 25 சேவாதளத்தொண்டர்கள்

ஸ்ரீ ஸத்ய ஸாயி பாலவிகாஸ் பாடத்திட்டம், தார்மீக விழுமியங்களின் மூலம் குழந்தைகளை சிறந்த குடிமக்களாக உருவாக்குவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த நோக்கத்தின் ஒரு பகுதியாக, பாலவிகாஸ் ஆண்டுத் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. பாலவிகாஸ் தேர்வுகளுக்கான தயாரிப்பு கும்பகோணம் பாலவிகாஸ் மையங்களில் மூன்று மாதங்களுக்கு முன்பே தீவிரமாகத் தொடங்கியது. பாடத்திட்டத்தில் உள்ள பிரார்த்தனைகள், கதைகள், பண்டிகைகளின் முக்கியத்துவம், பல்வேறு கலாச்சாரத்தின் கருத்துக்கள், அன்றாட வாழ்க்கையில் மனித மதிப்புகளின் நடைமுறை பயன்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

மாணவர்களின் புரிதலையும் முன்னேற்றத்தையும் கண்காணிக்க வாய்மொழி மற்றும் எழுத்துத் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. பாலவிகாஸ் குருமார்கள் ஒவ்வொரு மாணவர்க்கும் தனிப்பட்ட கவனத்தை செலுத்தி கூடுதல் முயற்சி எடுத்து வருகின்றனர். மாணவர்கள் தேர்வுகளை நம்பிக்கையுடன் எதிர்கொள்ளத்

தயாராகி வருகின்றனர்.

தேர்வுக்காக மட்டும் அல்லாது அவர்களின் வாழ்க்கையை சிறந்த முறையில் மனித விழுமியங்களின் அடிப்படையில் நடத்துவதற்கும் தயாராகி வருகின்றனர்.



# மாணவர்களுக்கு எழுதுபொருள் வழங்கல்

தஞ்சாவூர் 2.6.25 **70** பயனாளிகள்

**12** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் அருளால் தஞ்சாவூர் அரசு மாணவர்கள் விடுதி மாணவர்களுக்கு, எழுதுபொருள் மற்றும் குளிர்பானங்கள் வழங்கப்பட்டன. 60+ மாணவர்கள் பயனடைந்தனர். 12 சேவாதள தொண்டர்கள் பங்கேற்றனர்.





# 100 இல்லங்களில் சிறப்பு பஜன்

**திண்டுக்கல்**

5, 6, 12, 13, 16, 19, 20, 21, 22, 25, 26, 27, 28, 29 ஜூன் 2025

**165+** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களது பேரருளினால் 100 இல்லங்களில் சிறப்பு சாய் பஜன் கீழ்க்கண்ட தேதிகளில் நடைபெற்றது.

47 வது பஜன் 05.06.25 திருமதி.சுதா சாய்ராம், 48 வது பஜன் 06.06.25 திருமதி.விஜயலக்ஷ்மி சாய்ராம், 49 வது பஜன் 12.06.25 திருமதி.மல்லிகா சாய்ராம், 50 வது பஜன் 13.06.25 திருமதி.ரதி மோகன் சாய்ராம்.

51 வது பஜன் 16.06.25 செக்கு விநாயகர் கோவில்சாய்ராம், 52 வது பஜன் 19.06.25 திரு. மூர்த்தி சாய்ராம், 53 வது பஜன் 20.06.25 திரு.சுதர்சன் சாய்ராம், 54 வது பஜன் 21.06.25 திரு.பத்ரி சாய்ராம், 55 வது பஜன் 22.06.25 திருமதி.சங்கரி ராம்குமார் சாய்ராம்.

56 வது பஜன் 25.06.25 திருமதி.சாந்த நாயகி சாய்ராம், 57 வது பஜன் 26.06.25 திருமதி.சாந்தி துளசிராம் சாய்ராம், 58 வது பஜன் 27.06.25 திரு.சுப்பிரமணி சாய்ராம், 59 வது பஜன் 28.06.25 திரு.கிருஷ்ணமூர்த்தி சாய்ராம், 60 வது பஜன் 29.06.25 திருமதி.புவனா சாய்ராம்,





# இலவச மருத்துவ முகாம்

திண்டுக்கல் 29.6.25 **22** பயனாளிகள்

**2** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களது பேரருளினால் 29-06-25 காலை 9.30 மணி முதல் 11.30 மணி வரை இலவச பொது மருத்துவ முகாம் T.வாடிப்பட்டியில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் 1 மகிளா, 1 ஆண் சேவாதளத்தொண்டர் மற்றும் 22 பயனாளிகள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.






# திருக்கோவில் உழவாரப்பணி

**திண்டுக்கல்** 18.6.25 **7** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களது பேரருளினால் 18.6.25 புதன் கிழமை அன்று காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை குள்ளனம்பட்டி முருகன் கோவிலில் நடைபெற்ற உழவாரப்பணியில் மகிளாஸ் 7 பேர் கலந்து கொண்டு சேவையாற்றினர்.

Love All, Serve All
Help Ever, Hurt Never

# சேவா வாணி

ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம் (இந்தியா)

தமிழ்நாடு - தெற்கு

ஜூன்
2025

# முதியோர் இல்லத்தில் பஜனை

திண்டுக்கல் | 27.6.25 | **52** பயனாளிகள்

**52** சேவாதளத்தொண்டர்கள்

நம் அன்பு பகவானின் அனுக்கிரகத்தால் கடந்த ஜூன் 27ம் தேதி, பழனி நகராட்சியால் நடத்தப்படும் முதியோர் இல்லத்தில், பழனி சமிதி பாலவிகாஸ் குழந்தைகளின் பஜனை சிறப்பாக நடைபெற்றது.

இல்லத்தில் வசிக்கும் வயதான ஆண், பெண் முதியவர்கள் 30 பேருக்கு பயன்படும் வகையில் சோப், பேஸ்ட், பிஸ்கட் போன்ற பொருட்கள் ஸ்வாமியின் பிரசாதமாக வழங்கப்பட்டன. பாலவிகாஸ் குழந்தைகள் 12 பேர், பாலவிகாஸ் குருமார், பெற்றோர் 10 பேர் இந்த புனித சேவையில் கலந்து கொண்டார்கள்.

நம் அன்பு ஸ்வாமியின் அருள்வாக்கான 'அனைவரையும் நேசி, அனைவருக்கும் சேவை செய்' என்னும் பொன்மொழியினை பாலவிகாஸ் மாணவர்கள் உணரும் வண்ணம் இந்த நிகழ்வு அமைந்தது.




தமிழ்நாடு அரசு தேசிய நகர் புற
வாழ்வாதார திட்டம் 2020-21
நகர்புற வீடு அற்றோர்களுக்கான
தங்கும் மையம் NORMAL SHELDER
மதிப்பீட்டுத் தொகை ரூ 70.00.இலட்சம்.
PALANI MUNICIPALITY
SMILE Project
ஸ்மையில் திட்டம்
PALANI MUNICIPALITY & ROJAVANAN TRUST
GO GREEN

# ஆஷாட நவராத்திரி விழா

திருச்சி

26/6/2025 - 4/7/2025

பகவானின் அளவற்ற பெரும் கருணையாலும் ஆசீர்வாதத்தாலும் திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் சமிதி, ஸ்ரீ சத்ய சாய் ஆன்மீக மையத்தில் எழுந்து அருள் பாலிக்கும் காயத்ரி தேவிக்கு 26.6.25 முதல் 4.7.25 வரை ஆஷாட நவராத்திரி விழா 9 நாட்களும் மிகச் சிறப்பாக கொண்டாடப்பபட்டது . ஒவ்வொரு நாளும் ஸ்ரீ சத்ய சாய் காயத்திரிக்கு சிறப்பு அலங்காரங்கள் செய்யப்பபட்டு, திருச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து சமிதியை சார்ந்த மகளிரும் கலந்து கொண்டு தேவிக்கு லலிதா சஹஸ்ரநாம பாராயணம் ,லலிதா அஷ்டோத்திரம், சாயி அஷ்டோத்திரம் மற்றும் சாயி பஜனைகள் பாடி நிகழ்ச்சியை சிறப்பித்தனர். தினமும் சுமங்கலி பூஜையும், வஸ்திர தானமும் நடைப்பெற்றது.





# இலவச மருத்துவ முகாம்

திருச்சி | 8.6.25 | **126** பயனாளிகள் | **10** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் அளவற்ற பெரும் கருணையினால் திருச்சி மாவட்டம் புதுக்கோட்டை மெயின் சமிதியின் சார்பாக புதுக்கோட்டை மெயின் சமிதி மற்றும் குழிபிறை நகரத்தார் இணைந்து நடத்திய இலவச பொது மருத்துவ முகாம் 8.6.25 அன்று குழிபிறையில் நடைபெற்றது. மருத்துவர்கள் எண்ணிக்கை: 5





# கடை வைப்பதற்கு உதவி

திருச்சி 22.6.25

பகவானின் பெரும் கருணையினால் திருச்சி மாவட்டம் பாலக்குறிச்சி சமிதியை சார்ந்த கீரணிப்பட்டி கிராமத்தில் வசிக்கும் ராசம்மாள் என்பவருக்கு 22.6.25 அன்று டீக்கடை பொருட்கள் சுவாமியின் அருட்பிரசாதமாக வழங்கப்பட்டது. அதே நாளில் சுவாமியின் கருணையினால் பாலக்குறிச்சிக்கு அருகில் உள்ள மலைமேடு கிராமத்தைச் சேர்ந்த உடல் குறைபாடுள்ள செல்வம் என்பவருக்கு பெட்டிக்கடை மற்றும் அதற்கு தேவையான பொருட்கள் பகவானின் இனிய பரிசாக வழங்கப்பட்டது.






# சாய் விஜயம்

திருச்சி 14.6.25 51 சேவாதளத்தொண்டர்கள்

சுவாமியின் 100 வது பிறந்தநாள் வைபவத்தின் ஒரு நிகழ்ச்சியாக நடைபெற்று வரும் 100 இல்லங்களுக்கு "சாய் விஜயம்" நிகழ்ச்சியின் 50வது இல்லத்தின் சிறப்பு பஜனை 14.06.25, சனிக்கிழமை காலை 11:00 மணிக்கு ஸ்ரீரங்கத்தில் பக்தரின் இல்லத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பஜனையை சிறப்பித்தார்கள். அன்றே 51வது இல்ல சாய் விஜயமும் பஜனையும் நடைபெற்றது.



# நாராயண சேவை

**திருச்சி** 15/6/2025 & 19/6/2025

பகவானின் பெரும் கருணையினால் திருச்சி மாவட்டம் புதுக்கோட்டை மெயின் சமிதி சார்பாக 15-6-25 ஞாயிறு அன்று கட்டியாவயல் கிராமத்தில் நாராயண சேவை நடைபெற்றது. தயிர் சாதம் சுவாமியின் பிரசாதமாக வழங்கப்பட்டது. பகவானின் பெரும் கருணையினால் 19.6.25 அன்று மகிளா தினத்தை முன்னிட்டு புதுக்கோட்டை மெயின் சமிதி சார்பாக நேசக்கரம் முதியோர் இல்லத்தில் நாற்பத்தி ஐந்து நபர்களுக்கு இரவு சிற்றுண்டி வழங்கப்பட்டது.

திருச்சி கே கே நகர் சமிதி சார்பாக அன்னை முதியோர் இல்லம், அன்னை குழந்தைகள் காப்பகம் மற்றும் பார்வையற்றோர் பள்ளி முதலிய இடங்களுக்கு 1029 இட்லிகள் வழங்கப்பட்டன. ஸ்ரீரங்கம் சமிதி சார்பாக 1250 இட்லிகள் சாம்பாருடன், லூப்ரா தாமஸ் பார்வையற்றோர் இல்லத்திற்கு வழங்கப்பட்டன.

# பள்ளிச் சீருடை வழங்குதல்

திருச்சி 4.7.25 **40** பயனாளிகள்

பகவானின் பெருங்கருணையுடன் திருச்சி மாவட்டம் கல்லுக்குழி சமிதியினரால் மலைக்கோட்டை தாயுமானவர் ஆரம்பப் பள்ளியில் பயிலும் 40 ஏழை மாணவ மாணவிகளுக்கு பள்ளிச் சீருடை வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பள்ளி தலைமை ஆசிரியர் வரவேற்புரை வழங்கினார். தமிழ்நாடு தெற்கு மாநில துணைத்தலைவர் குழந்தைகளுக்கு சீருடைகளை வழங்கினார். திருச்சி மாவட்ட கல்வி ஒருங்கிணைப்பாளர் அவர்களும் தமிழ்நாடு மாநில கல்வி ஒருங்கிணைப்பாளர் அவர்களும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.



# புதிய பாலவிகாஸ் மையம் தொடக்க விழா

திருச்சி | 19.6.25 | **60** பயனாளிகள் | **5** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெரும் கருணையினால் திருச்சி மாவட்டம் லால்குடியில் சாயி க்ளோபல் ஹை டெக் மெட்ரிகுலேஷன் பள்ளியில் புதிய பாலவிகாஸ் மையம் 19.6.25 அன்று தொடங்கப்பட்டது.



# புற்றுநோய் விழிப்புணர்வு மற்றும் பரிசோதனை மருத்துவ முகாம்

**திருச்சி** 22.6.25 **71** பயனாளிகள் **15** சேவாதளத்தொண்டர்கள்

சுவாமியின் அபரிமிதமான அருளால், 22.6.2025 அன்று திருச்சி மாவட்டம் பாலக்குறிச்சியில் புற்றுநோய் விழிப்புணர்வு மற்றும் பரிசோதனைக்கான மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.

இந்த முகாமை Karkinos Healthcare Private Limited, சென்னை ஐஜடியுடன் இணைந்து ஏற்பாடு செய்தது. இதற்கு Karkinos Healthcare -ன் மருத்துவ இயக்குநர் டாக்டர் மாலினி (சுவாமியின் தீவிர பக்தர்), தலைமை தாங்கினார்.

புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிவதற்கான மருத்துவ பரிசோதனையை நடத்தவும், அனைத்து வகையான புற்றுநோய்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அனுபவம் வாய்ந்த மருத்துவ நிபுணர்கள் குழு ஒன்று கலந்து கொண்டது.

இந்த முகாமினால் 86 பெண்கள் மற்றும் 71 ஆண்கள் பயனடைந்தனர். 7 ஆண் சேவகர்களும் 10 மகிளா சேவகர்களும் பங்கேற்று சேவை செய்தனர். பகவானுக்கு மங்கள ஆரத்தியுடன் முகாம் நிறைவடைந்தது.





Love All, Serve All
Help Ever, Hurt Never

# சிறப்பு நாராயண சேவை

திருநெல்வேலி 29.6.25 **107** பயனாளிகள்

பகவானின் அருளாசியுடன் திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை சமிதியில் சிறப்பு நாராயண சேவை சாய் அன்பர்கள் வீட்டில் உணவு தயாரிக்கப்பட்டு 107 பொட்டலங்கள் அரசு சிறப்பு மருத்துவமனையில் 29.6.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று வழங்கப்பட்டது.






## கிராம சேவை

திருநெல்வேலி 22.6.25 **12** பயனாளிகள்

**135** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் அருளாசியுடன் திருநெல்வேலி மாவட்டத்தின் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதிகளில் மேலகரம் சமிதியில் 22.6.2025 ஞாயிற்றுக்கிழமை சிறப்பு நாராயண சேவை சமிதியின் சேவாதாளத்தொண்டர்கள் எல்லோரும் சேர்ந்து சமிதியில் தயாரித்த உணவை அருகிலுள்ள கிராமத்திற்கு சென்று கொடுத்தார்கள். இதில் 135 நாராயணர்கள் பயன்பெற்றனர்.





## மருத்துவ முகாம்

திருநெல்வேலி 28.6.25 187 பயனாளிகள்

பகவானின் பூரண அனுக்ரஹத்தால் திருநெல்வேலி மாவட்டம் ஓம் பிரணவா ஆஸ்ரமம் பஜனா மண்டலி சார்பாக 29.6.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று ஸாய் தன்வந்திரி திட்டத்தின் சார்பாக மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையுடன் இணைந்து இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் மீனாட்சி மிஷன் மருத்துவர்கள் 3 பேர் கலந்துகொண்டு ஆலோசனைகள் வழங்கினார்கள். கண் பார்வை சம்பந்தமான பரிசோதனைகள் செய்யப்பட்டன. 3 மாதத்திற்கு மாத்திரை மருந்துகள் வழங்கப்பட்டன.



# ஸாயி பெற்றோர்மை

திருநெல்வேலி 22.6.25 **24** பயனாளிகள்

**18** சேவாதளத்தொண்டர்கள்

நம் அன்பு பகவானின் அனுக்கிரகத்தால் கடந்த ஜூன் 22ம் தேதி செங்கோட்டை சமிதியில் காலை 9.30 மணிமுதல் 2.00 மணிவரை பாலவிகாஸ் குழந்தைகளின் பெற்றோருக்கு ஸாயி பெற்றோர்மை நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதில் 14 பெண்களும் 4 ஆண்களும் கலந்து கொண்டனர். சமிதியை சேர்ந்த பாலவிகாஸ் குழந்தைகள், பெற்றோர், பாலவிகாஸ் குருமார்கள் மற்றும் சாயி அன்பர்கள் பலரும் பங்கு பெற்றனர். சமிதி கன்வீனர் மற்றும் பாலவிகாஸ் குரு சிறப்புரை ஆற்றினர். இந்நிகழ்ச்சி பெற்றோருக்கு மிகவும் பயன் பெறும் வகையில் அமைந்ததாக அனைவரும் மகிழ்ச்சி அடைந்தனர். நிகழ்ச்சியின் முடிவில் அனைவருக்கும் ஸ்வாமியின் அருட்ப்ரசாதம் வழங்கப்பட்டது.



# ஸ்ரீ சத்ய சாயி சப்தாஹம்

திருநெல்வேலி

400 சேவாதளத்தொண்டர்கள்

ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனம் திருநெல்வேலி சார்பாக பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா அவர்களின் 100வது பிறந்த தினத்தை முன்னிட்டு 22.6.2025 ஞாயிற்றுக்கிழமை முதல் 28.6.25 சனிக்கிழமை வரை சென்னை சாய்ராம் மற்றும் கோவை ராம்ஜி அவர்களால் ஸ்ரீ சத்ய சாயி சப்தாஹம் என்ற பெயரில் நிகழ்ச்சி ஒன்று பாளையங்கோட்டை ஸ்ரீராமர் கோவில் சௌராஷ்டிரா மண்டபத்தில் நடைபெற்றது.

தினமும் மாலை 6.00 மணி முதல் 6.30 மணி வரை சாய் பஜனையும், 6.30 மணி முதல் 8.00 மணி வரை ஒவ்வொரு நாளும் ஒரு பரிணாமத்தில் பகவானைப் பற்றியும் அவரது அற்புதங்கள் பற்றியும் அனைத்து பக்தர்களிடமும் பகிர்ந்து கொள்ளப்பட்டது. தினமும் 60க்கு மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு பகவானின் அருளைப் பெற்றனர்.



# 108 ருத்ர பாராயணம் & ஏகாதச ருத்ர பாராயணம்

திருப்பூர் 322 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா அவர்களின் நூறாவது பிறந்த தின ஜன்மோத்சவ கொண்டாட்டங்களின் ஒரு அம்சமாக நமது திருப்பூர் மாவட்டத்தில் 108 கோவில்களில் ருத்ர பாராயணம் செய்வது என முடிவு செய்யப்பட்டு, இனிதாக நடந்து வருகிறது.

ஜூன் மாத நிகழ்ச்சிகள்:

31வது ருத்ர பாராயணம் ஊத்துக்குளி ரோடு கருமாரபாளையம் பேருந்து நிறுத்தத்தில் அமைந்துள்ள கருமாரியம்மன் கோவிலில் சொர்ணாம்பிகை உடனமர் சொர்னேஸ்வரர் சந்நிதி முன்பு 50 நபர்களுடன் நடைபெற்றது.
32வது பாராயணம் ஊத்துளி ரோடு பெரியபாளையத்தில் அமைந்துள்ள ஆவுடைய நாயகி உடனமர் சுக்ரீஸ்வரர் ஆலயத்தில் 48 நபர்களுடன் நடைபெற்றது.
33வது பாராயணம் திருப்பூர் லட்சுமி நகரில் அமைந்துள்ள உண்ணாமலை உடனமர் அருணாச்சலேஸ்வரர் ஆலயத்தில் 42 நபர்களுடன் நடைபெற்றது.
34 ஆவது பாராயணம் திருப்பூர் முத்து நகரில் அமைந்துள்ள காசி விசாலாட்சி உடனமர் காசி விஸ்வநாதர் ஆலயத்தில் 37 நபர்களுடன் நடைபெற்றது.

35 ஆவது பாராயணம் கோயம்புத்தூர் சாய்பாபா காலனியில் உள்ள ஸ்ரீ நாக சாய் திருக்கோவிலில் 27 நபர்கள் கலந்து கொள்ள சிறப்பாக நடைபெற்றது.

36 ஆவது பாராயணம் அன்னூர் அருந்தவ செல்வி உடனமர் மன்னீஸ்வரர் கோவிலில் 21 நபர்களுடன் நடைபெற்றது.
37வது பாராயணம் திருப்பூர் ஸ்ரீ ராஜ விநாயகர் ஆலயத்தில் உள்ள சொர்ணாம்பிகை உடனமர் ஜோதிர் லிங்கேஸ்வரர் சன்னதி முன்பு 52 நபர்களுடன் நடைபெற்றது.
38 ஆவது பாராயணம் திருப்பூர் மாதப்பூர் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி ஆலயத்தில் உள்ள மரகதாம்பிகை உடனமர் மகிமாலீஸ்வரர் சந்நிதி முன்பு 32 நபர்களுடன் நடைபெற்றது.
39வது பாராயணம் பல்லடம் பங்காளி பாளையத்தில் அமைந்துள்ள காசி விசாலாட்சி உடனமர் காசி விஸ்வநாதர் ஆலயத்தில் 50 நபர்களுடன் நடைபெற்றது.



Love All, Serve All
Help Ever, Hurt Never

# அகில இந்திய மகிளா மாநாட்டில் கலந்துகொள்ளுதல்

திருப்பூர்

4 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபா அவர்களுடைய பெரும் கருணையினால் திருப்பூர் மாவட்ட மகிளா ஆன்மீக ஒருங்கிணைப்பாளர், சேவை ஒருங்கிணைப்பாளர், கல்வி ஒருங்கிணைப்பாளர் அவர்களும், மற்றும் உடுமலைப்பேட்டை மகிளா சகோதரிகள் இரண்டு பேரும், பிரசாந்தி நிலையத்தில் நடைபெறும் அகில இந்திய மகிளா மாநாட்டில் கலந்து கொண்டார்கள்.

Love All, Serve All
Help Ever, Hurt Never

சேவா வாணி
ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம் (இந்தியா)
தமிழ்நாடு - தெற்கு

ஜூன்
2025

# திருவிளக்கு பூஜை

திருப்பூர்

112 சேவாதளத்தொண்டர்கள்

நம் அன்பு தெய்வம் பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபா அவர்களின் நூறாவது பிறந்த தின ஜன்மோத்ஸவ கொண்டாட்டங்களின் ஒரு அம்சமாக, நமது திருப்பூர் மாவட்டத்தில் 108 கோவில்களில் திருவிளக்கு பூஜை நடந்து வருகிறது. ஜூன் மாத நிகழ்வுகள்: 12வது திருவிளக்கு பூஜை ஊத்துக்குளி ரோடு கருமாரம்பாளையத்தில் அமைந்துள்ள கருமாரியம்மன் ஆலயத்தில் 35 நபர்களுடன் நடைபெற்றது. 13 வது திருவிளக்கு பூஜை திருப்பூர் ராயபுரம் ஸ்ரீ ராஜ விநாயகர் ஆலயத்தில் 54 நபர்களுடன் நடைபெற்றது. 14வது திருவிளக்கு பூஜை முத்து நகர் காசி விஸ்வநாதர் ஆலயத்தில் 23 நபர்களுடன் நடைபெற்றது.





# பல்லக்கு சேவை

திருப்பூர் 10.6.25 **50** சேவாதளத்தொண்டர்கள்

பிரதி மாதம் நடைபெறும் பல்லக்கு சேவை இந்த மாதம் வைகாசி பௌர்ணமியை முன்னிட்டு 10.6.2025 செவ்வாய்க்கிழமை மாலை 6:30 மணிக்கு இடுவாய் ஸ்ரீ சத்ய சாய் சேவா சமிதியின் சார்பில் மிகவும் ஆனந்தமாக நடைபெற்றது. தொடர்ந்து மழை பெய்தாலும் ஆர்வமாக 50க்கும் மேற்பட்ட சகோதர சகோதரிகள் மற்றும் பாலவிகாஸ் குழந்தைகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்



# பள்ளிகளில் இலவச கண் சிகிச்சை முகாம்

திருப்பூர் **1600** பயனாளிகள்

ஆண்டுதோறும் திருப்பூர் மாவட்டத்தில் அரசு பள்ளிகளில் நடத்தப்படும் கண் சிகிச்சை முகாமானது இந்த ஆண்டும் நடைபெற்றது.

ஜூன் மாத முகாம்கள் :
13/6 அன்று மங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளியில் இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது. இதில் 1230 குழந்தைகளுக்கு பரிசோதனை செய்யப்பட்டு 38 குழந்தைகளுக்கு கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. 5 குழந்தைகளை மேல் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இரண்டாவது முகாம் 26/6 அன்று வாவிபாளையம் குருவாயூரப்பன் அரசாங்க மேல்நிலைப் பள்ளியில் நடத்தப்பட்டது. அதில் 371 குழந்தைகளுக்கு பரிசோதனை செய்யப்பட்டு 12 குழந்தைகளுக்கு கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டது. மேலும் 11 குழந்தைகள் மேல் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.





# பாலவிகாஸ் மையம் முதலாமாண்டு நிறைவு விழா

திருப்பூர் 22.6.25 50 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் பரிபூரண ஆசியுடன் திருப்பூர் மாவட்டம், ராயபுரம் சமிதி, காளிபாளையம் கிராமம், எம்.ஜி.ஆர்.நகர் பாலவிகாஸ் மையத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழா நடைபெற்றது. சாய் பஜணையைத் தொடர்ந்து ராயபுரம் சமிதி கன்வீனர் விழாவினை தொடங்கி வைக்க, மாவட்டத் தலைவரின் சிறப்புரை, பெற்றோர்மை வகுப்பு, பெற்றோர்களுக்கு பாத பூஜை என நிகழ்ச்சிகள் வெகு சிறப்பாக நடைபெற்றன. இதில் 15 குழந்தைகள், 16 பெற்றோர், மாவட்ட கல்வி மற்றும் சேவை ஒருங்கிணைப்பாளர்கள், சமிதி கன்வீனர்கள், சமிதி அங்கத்தினர்கள் என 50 பேர் கலந்துகொண்டனர்.



# பிரேமதரு மரம் நடுதல்

திருப்பூர் 15.6.25 **10** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அருளால் 15-06-2025 அன்று பல்லடம் ரோட்டில் அமைந்துள்ள நியாய விலை கடை சார்பாக 50 மரங்கள் தரப்பட்டு மூன்று மரக்கன்றுகள் முதற்கட்டமாக நடப்பட்டன.

Love All, Serve All
Help Ever, Hurt Never

# சேவா வாணி

ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம் (இந்தியா)

தமிழ்நாடு - தெற்கு

ஜூன்
2025

## புதிய பாலவிகாஸ் மையம் தொடக்க விழா

திருப்பூர் 13.6.25 **14** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேரருளால் திருப்பூர் சேரன் நகர் சமிதி நல்லூர் பஜனா மண்டலியில் புதிய பாலவிகாஸ் வகுப்பு தொடங்கப்பட்டது. இதில் பாலவிகாஸ் மாணவர்கள் 9 பேர், பெற்றோர் 2 பேர், சமிதி உறுப்பினர்கள் 2 பேர் மற்றும் மாவட்ட கல்வி ஒருங்கிணைப்பாளர் ஆக மொத்தம் 14 பேர் கலந்து கொண்டனர்.

# மகளிர் தின நிகழ்ச்சிகள்

திருப்பூர் 19.6.25 **20** சேவாதளத்தொண்டர்கள்

9.06.2025 அன்று, வியாழக்கிழமை, மகளிர் தினம் சிறப்பாக நடைபெற்றது. இதில் 20 மகளிர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மேற்கண்ட நிகழ்ச்சியில் திருப்பூர் மாவட்ட கல்வி ஒருங்கிணைப்பாளர் திருமதி சுமதி ராஜகோபாலன் சாய்ராம் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்



# மாவட்டத் தலைவர் மற்றும் சேவை ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டத்தில் கலந்துகொள்ளல்

திருப்பூர் 29.6.25 **30** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் பாபா அவர்களின் திருவருளால் 29-06-2025 அன்று ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனங்கள் தமிழ்நாடு - தெற்கு, சார்பாக மாவட்ட சமிதி தலைவர்கள் மற்றும் சேவை ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம் கோபிசெட்டிபாளையத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இதில் நமது அன்பு தெய்வம் அவர்களது நூறாவது பிறந்தநாள் வைபவத்தை சிறப்பாக கொண்டாட மாநில அளவில் மற்றும் தேசிய அளவில் செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் பற்றியும் மற்றும் நாம் ஒவ்வொருவரும் பகவான் அவர்களின் அன்பிற்கு பாத்திரமாக விளங்கி எவ்வாறு சிறப்பாக சேவை செய்ய வேண்டும் என்பதை பற்றியும் பேசப்பட்டது. இதில் திருப்பூர் மாவட்டம் சார்பாக 30 பேர் கலந்து கொண்டனர்.

# ஹோமியோபதி மற்றும் அலோபதி மருத்துவ முகாம்

திருப்பூர்

251 பயனாளிகள்

ஒவ்வொரு வியாழன் தோறும் மாலை 5 மணி முதல் 6 மணி வரை நடக்கும் ஹோமியோபதி மற்றும் அலோபதி மருத்துவ முகாம்களில் மொத்தம் 251 பேர் பங்கு கொண்டு பயன் பெற்றனர்





# 100 வீடுகளில் பஜனை

## திருவண்ணாமலை

நமது அன்பிற்குரிய பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபா அவர்களின் ஆசிர்வாதங்களுடன் திருவண்ணாமலை ஸ்ரீ சத்ய சாய் சேவா சமிதி சார்பாக நமது பகவானின் நூறாவது பிறந்த ஆண்டினை முன்னிட்டு 26.5.2025 அன்று "நூறு இல்லங்களில் பஜனை" என்னும் நிகழ்ச்சியின் முதல் நிகழ்ச்சி இனிதே தொடங்கியது.

அதைத்தொடர்ந்து 01/6/2025 முதல் 30/6/2025 வரை தொடர்ந்து மொத்தம் 33 பஜனை நடைபெற்றது. அனைத்து இல்லங்களிலும் பகவானின் தெய்வீக மலரான சனாதன சாரதி வழங்கப்பட்டது.

நமது அன்பிற்குரிய பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபா அவர்களின் ஆசிர்வாதங்களுடன் திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி சமிதி சார்பில் 100 வீடுகளில் பஜனை 24.3.2025 அன்று இனிதே தொடங்கியது.

அதைத்தொடர்ந்து 02/6/2025 முதல் 28/6/2025 வரை தொடர்ந்து மொத்தம் 12 பஜனை நடைபெற்றது.





## நாராயண சேவை

தேனி | 6, 7, 14, 21, 28.06.2025 | 102 பயனாளிகள் | 13 சேவாதளத்தொண்டர்கள்

ஸ்ரீ சத்ய சாயி பாபா பெரியகுளம் சேவா சமிதியில் பிரதி மாதம் சனிக்கிழமையில் நாராயண சேவை நடைபெறுகிறது.

இதில் ஒவ்வொரு வாரமும் எட்டு பேர் பயன் பெறுகின்றனர். இரண்டு ஆண் சேவாதளத்தொண்டர்கள் நாராயண சேவையை மேற்கொள்கின்றனர். மற்றும் ஜூன் 6-ம் தேதி அன்று பெரியகுளம் சமிதியின் சார்பாக பெரியகுளம் மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையில் உள்ள மனநலம் குன்றிய நோயாளிகளுக்கு மாலை 4 மணி அளவில் பிஸ்கட் காப்பி போன்ற சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன.

மொத்தம் 70 பேர் பயன்பட்டனர். இதில் ஏழு ஆண் சேவாதளத்தொண்டர்களும் நான்கு பெண் சேவாதளத்தொண்டர்களும் பங்கேற்றனர். பாலவிகாஸ் குழந்தைகளுடன் அன்று பஜனையும் நடைபெற்றது.


DMHP

# ஓம் சாதனா பள்ளியில் சாயி பஜன்

மதுரை 5.6.25

மதுரை தேனி சாலையில் அமைந்துள்ள பிரபல CBSC பள்ளியான ஓம் சாதனா பள்ளியில் மாலை 5.00 மணி முதல் 6.00 மணி வரை சிறப்பு சாயி பஜனை நடைபெற்றது.

2025-26 ஆம் ஆண்டின் பருவ கால வகுப்புகள் தொடங்குவதை முன்னிட்டு நடத்தப்பட்ட இந்த பஜனை மதுரை ஸ்ரீ சத்ய சாயி அனுக்ரஹா சமிதி சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டது.

சிறப்பு பஜனையில் மாவட்ட பொறுப்பாளர்களுடன் மதுரை SS காலனி பக்தர்களும் திராளாக வருகை புரிந்து நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

சமிதி சார்பில் வாரம் தோறும் பாலவிகாஸ் வகுப்புகள் நடைபெற்று வருகிறது, இப்பள்ளியில் விருப்பமுள்ள ஆசிரியர்களுக்கு பாலவிகாஸ் பற்றி பாலவிகாஸ் குருமார்கள் பயிற்சி அளிக்கத் தயராக உள்ளதாக மாவட்டத் தலைவர் அறிவித்தார்.

# சீரடி சாயி, பர்த்தி சாயி திவ்ய கதா படக்காட்சி

விருதுநகர் 8.6.25 44 பயனாளிகள்

44 சேவாதளத்தொண்டர்கள்

சுவாமியின் பெரும் கருணையினால் கடந்த ஜூன் 8 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை ராஜபாளையம் சமிதியில் பாலவிகாஸ் குழந்தைகளுக்கு சுவாமியின் வாழ்க்கை வரலாற்றை தெரியப்படுத்தும் விதமாக சீரடி சாயி, பர்த்தி சாயி திவ்ய கதா படக்காட்சி காலை 9:30 மணி முதல் மாலை 4:15 மணி வரை ஒளிபரப்பப்பட்டது.

அவ்வப்பொழுது குழந்தைகளுக்கு நன்றாக புரியும்படி தெளிவான விளக்கங்களும் அளிக்கப்பட்டன. மேலும் இடையிடையே குழந்தைகளுக்கு உற்சாகம் அளிக்கும் விதமாக இப்பட காட்சிகளிலிருந்து கேள்விகள் கேட்கப்பட்டு சரியான பதில் கூறும் குழந்தைகளுக்கு சாக்லேட்டுகள் வழங்கப்பட்டன. மதியம் அனைவருக்கும் நாராயண சேவை வழங்கப்பட்டது.

இதில் 31 பாலவிகாஸ் குழந்தைகளும், பாலவிகாஸ் குருமார்கள், பெற்றோர்கள் மற்றும் சேவாதள தொண்டர்கள் என சுமார் 15 பேர் கலந்துகொண்டு இந்நிகழ்ச்சியை சிறப்பித்தனர். குழந்தைகளுக்கு சுவாமியின் மீது நம்பிக்கையையும் பக்தியையும் ஏற்படுத்தும்

விதமாக இந்த படக்காட்சி அமைந்தது. மங்கள ஆரத்தியுடன் இந்நிகழ்ச்சி இனிதே நிறைவு பெற்றது. நிறைவாக இதில் கலந்துகொண்ட அத்துணை குழந்தைகளுக்கும் விபூதி பிரசாதம் மற்றும் சாக்லேட்டுகள் வழங்கப்பட்டன.





## குடும்ப பஜன்

விழுப்புரம் | வாரந்தோறும் | 32 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் நவநெறி கோட்பாடுகளில் 2வது கோட்பாடான குடும்பத்தினருடன் வாரம் ஒரு முறையாவது தொடர்ந்து பஜனை செய்தல் என்பதற்கிணங்க விழுப்புரம் சமிதி அளவில் அங்கத்தினர்கள் வீட்டில் குடும்ப பஜனை நடைபெறுகிறது.

சேவா வாணி
ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம் (இந்தியா)
தமிழ்நாடு - தெற்கு
ஜூன் 2025

Love All, Serve All
Help Ever, Hurt Never

# சாதனா முகாம் (பிரசாந்தி சேவா 2025)

**விழுப்புரம்** 21.6.25 **170** பயனாளிகள் **30** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பரிபூரண ஆசியுடன் சின்ன சேலத்தில் விழுப்புரம் மாவட்டத்தின் ஒரு பகுதி சார்பாக சாதனா முகாம் நடை பெற்றது. இம்முகாமில் விழுப்புரம் மாவட்டத்தில் சேவைப் பணிகளை எவ்வாறு சிறப்பாக முன்னெடுப்பது இச்சேவைப்பணியினால் ஒரு சாதகன் அடையக்கூடிய ஆன்மீக உயர்நிலை மாற்றம் மற்றும் அதனால் சாதகன் பெறக்கூடிய பயன்கள் ஆகியன பற்றி விவாதிக்கப்பட்டன. மேலும் இவ்வாண்டு ஸ்வாமியின் நூற்றாண்டு வருவதால் பிரசாந்தி சேவைப் பணிக்கு அதிக அளவில் சேவாதளத் தொண்டர்கள் தேவைப் படுவதால் அதனை எவ்வாறு சமாளிப்பது அதற்கு விழுப்புரம் மாவட்டத்தில் இருந்து அதிக அளவில் சேவாதளத் தொண்டர்களை அனுப்புவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் ஆகியவைப் பற்றி விவாதிக்கப்பட்டது.






## நாராயண சேவை

விழுப்புரம் | தினமும் | 976 பயனாளிகள் | 180 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் ஆசியுடன் பகவானின் 100 வது பிறந்த நாளை முன்னிட்டு விழுப்புரம் சமிதியில் தினமும் ஒவ்வொரு குடும்பமும் நித்ய நாராயண சேவையில் ஈடுபடுகிறது.அந்தவகையில் கொந்தாமூர் சமிதியில் பாஞ்சாலம் சர்ச் முதியோர் காப்பகத்திலும் கொந்தாமூர் சமிதியைச் சார்ந்த ஆலம் பூண்டி கிராமத்திலும் 05-06-25 அன்று காலை உணவு வழங்கப்பட்டது.ஏமப்பேர் சமிதியில் கருணை இல்லப் பயனாளிகளுக்கு பால், பிஸ்கெட் மற்றும் விபூதிப் பிரசாதம் ஆகியவை வழங்கப்பட்டன. மற்ற சமிதிகளில் பொது நாராயண சேவை நடைபெற்றது.

# பிரேமதரு

**விழுப்புரம்** 23.6.25 **15** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் ஆசியுடன் பகவானின் 100வது பிறந்த நாளை முன்னிட்டு உளுந்தூர்பேட்டை சமிதி கிளியூர் பஜனா மண்டலியில் மாநில மாவட்ட வழிகாட்டுதலின்படி 100 மரக்கன்றுகள் நடுவதை இலக்காக கொண்டு ஒவ்வொரு மாதமும் 23ம் தேதி 10 மரக்கன்றுகள் நடப்பட்டு வருகின்றன.






# மகிளா தின சேவை

விழுப்புரம் 19.6.25 69 பயனாளிகள்

8 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் ஆசியுடன் மகிளா தினத்தை முன்னிட்டு அரசு மருத்துவமனை உள்பயனாளிகளுக்கு பால், ரொட்டி, விபூதி பிரசாதமாக வழங்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து பிறந்த குழந்தைகளுக்கு வஸ்திர தானம் செய்யப்பட்டது.





# சேவா வாணி




எதிர் வரும் மாதங்களில் தங்கள் மாவட்ட முக்கிய நிகழ்வுகள் இந்த மின் துணை இதழில் இடம் பெற, தெளிவான புகைப்படங்களுடன், தமிழில் நிகழ்ச்சி பற்றிய சிறு குறிப்புடன், மாவட்டத் தலைவர் வழியாக ssssotnreporting@gmail.com முகவரிக்கு அஞ்சல் அனுப்பவும்.

ஸ்ரீ சத்ய சாய் தமிழ்

Sri Sathya Sai Media Centre

Prasanthi Connect

ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம் (இந்தியா)

தமிழ்நாடு - தெற்கு